97542

# தமிழீழ சட்டக் கோவை

**1993**

2983cc

நீதி நிர்வாகத்துறை
தமிழீழ விடுதலைப் புலிகள்
தமிழீழம்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# தமிழீழ சட்டக் கோவை

**1993**

நீதி நிர்வாகத்துறை
தமிழீழ விடுதலைப் புலிகள்
தமிழீழம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ சட்டக் கோவை

1993

முதற் பதிப்பு: ஆகஸ்ட், 1993

வெளியீடு: நீதி நிர்வாகத்துறை
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்.

விலை: ரூபா 200/-

# பொருளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| 1. முன்னுரை | 1 |
| 2. நீதிமன்ற மொழியும் ஆவணங்களும் | 2 |
| 3. தமிழீழ நீதிமன்ற அமைப்பு விதிகள் | 4 |
| 4. தமிழீழச் சட்டக் கோவை | 9 |
| 5. குற்றவியல் வழக்கு நடவடிக்கை முறைகள் | 16 |
| 6. குடியியல் வழக்கு நடவடிக்கை முறைகள் | 19 |
| 7. குடியியல் தவறுகளும் நிவாரணங்களும் | 23 |
| 8. விபச்சாரம் | 28 |
| 9. பாலியல் வன்முறை | 30 |
| 10. திருமண ஏமாற்றம் | 31 |
| 11. தமிழீழ குற்றப் பொறுப்புக்களும் தண்டனைகளும் | 33 |
| 12. தமிழீழ வீதிப் போக்குவரத்து ஒழுங்கு விதிகள் | 38 |
| 13. தமிழீழ தொழில் நடைமுறைச் சட்டம் | 43 |
| 14. வழக்கு விசாரணைகளும் சட்ட அறிஞர்களின் பணியும் | 49 |
| 15. முக்கிய குறிப்பும் மாதிரிப் படிவங்களும் | 51 |


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# முன்னுரை

தமிழீழ மக்களுக்குச் சரியான முறையில் நீதி வழங்கும் முகமாக தலைவரின் பணிப்புரையின் பேரில் தமிழீழ நீதிமன்றங்கள் அமைக்கப்படுகின்றன. இந்நீதிமன்றங்களாவது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி விரைவாகவும், எளிதாகவும் அதே வேளை கூடுதலான பொருட்செலவுமின்றி நீதி கிடைக்கக்கூடிய வகையில் உறுதிப்படுத்துவதே தமிழீழ நீதிமன்றின் முதன்மையான நோக்கமாகும்.

தேவையற்ற வாதப் பிரதி வாதங்கள் நீக்கப்பட்டு நீதி கோரும் மக்கள் சுரண்டப்படுவது தவிர்க்கப்பட்டு ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடின்றி, நீதி வழங்கும் சமத்துவ நீதிமன்றமாக இது விளங்கும்.

தமிழீழ நீதிமன்றமும் அதன் சட்ட விதிகளும் உலக சமுதாயத்திற்கு ஒரு முன் மாதிரியாகவும், புரட்சிகரமானதாகவும் விளங்குவதுடன் தமிழீழத்தின் சுதந்திரமான நீதித்துறையாகவும் செயற்படும்.

குற்றம் செய்யாதவர்கள் தண்டிக்கப்படக்கூடாது என்ற உலக நீதிக்கோட்பாட்டிற்கு அமைய தம் பக்க நியாயத்தை தானாகவோ, சட்ட அறிஞர் மூலமாகவோ எடுத்துரைக்க பண வசதியற்ற தரப்பினருக்கு சட்ட அறிஞரின் சேவையை தமிழீழ நீதிமன்றமே ஒழுங்கு செய்யவும் இதனால் வழிவகுக்கப்படுகின்றது.

தமிழீழ நீதிமன்றத்தின் தண்டனைகள் தமிழீழத்தில் நற்குடிமக்களை உருவாக்கும் நோக்கில் குற்றவாளிகளை சமூக சீர்திருத்தப்பணிகளில் ஈடுபடுத்துவதன் மூலம் சிறந்த சமுதாயம் ஒன்றை உருவாக்கும் கொள்கையை அடிப்படையாகக் கொண்டதாக விளங்கும்.

தமிழீழ தேசியத் தலைவர் தமிழீழத்தின் சட்டம், ஒழுங்கைப் பேணுவதற்காகவும் தமிழீழ மக்கள் நியாயத்தைப் பெறுவதற்காகவும் காலத்திற்குக்காலம் தேவையான சட்ட விதிகளை ஆக்கி தமிழீழ நீதிமன்றம் ஊடாக நடைமுறைப்படுத்துவார். நீதித்துறை நேரடியாக அவரின் கீழ் செயற்படும். நீதித்துறையில் மாற்றங்கள் செய்தல், தண்டனைகளை மாற்றி அமைத்தல் என்பனவற்றைத் தலைவர் மட்டுமே மேற்கொள்வார்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# நீதிமன்ற மொழியும், ஆவணங்களும், நடைமுறையும்

1. தமிழீழ நீதிமன்ற நிர்வாக மொழியாக தமிழ்மொழி பயன்படுத்தப்படும்.

2. வாதங்கள், குறுக்கு விசாரணைகள், தொகுப்புரைகள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளும் தமிழ் மொழியில் அனுமதிக்கப்படும்.

3. சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள், மற்றும் தொடர்புடைய அறிக்கைகள் யாவும் மூலப்பிரதியாக அமைந்திருத்தல் வேண்டும்.

4. தமிழ் மொழியில் எழுதப்படாத ஆவணங்கள், விடயத்தில் ''உறுதிப்படுத்தப்பட்ட தமிழ் மொழிபெயர்ப்பும்'' இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

5. தமிழ் மொழியைத் தெரிந்திராத ஒருவர் வழக்கு நடவடிக்கையில் பங்குபற்றும்போது அவருக்கு மொழிபெயர்ப்பு வசதி நீதி நிர்வாகத்துறையால் செய்து கொடுக்கப்படும்.

6. நீதிமன்றத்தில் கையளிக்கப்படும் ஆவணங்கள் எதுவும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. அவ்வாறு மூல ஆவணங்கள் திரும்பப் பெறவிரும்புவோர், மூல ஆவணங்களுடன் உறுதிப்படுத்தப்பட்ட அதன் புகைப்படப் பிரதியையும் (போட்டோஸ்ராற் பிரதி) இணைத்து ஒப்படைத்த பின்னர் பரிசீலனையின் பின் மூலப்பிரதி திருப்பிக் கொடுக்கப்படும்.

7. தீர்ப்பின் பிரதி பெறவிரும்பும் வழக்கின் கட்சிக்காரர் பதிவாளருக்கு விண்ணப்பித்து கட்டணம் செலுத்திப் பெறலாம். ஒரு பக்கத்திற்கு ரூபா 30/= வீதம் அறவிடப்படும்.

8. நீதிமன்றில் கையளிக்கப்படும் ஆவணங்கள் அல்லது மொழிபெயர்ப்பு ஆவணங்கள் என்பவற்றில் மோசடி காணப்படின் அதனைக் கையளித்தவர் நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்திற்குப்பொறுப்பாளியாவார்.



9. வழக்கு நடவடிக்கையில் ஒரு தரப்பினரால் கையளிக்கப்பட்ட ஆவணம் எதனையும் மறுதரப்பினர் பார்வையிட விரும்பின் நீதிபதியிடம் விண்ணப்பித்து ஒப்புதல் பெற்றுக்கொள்ளல் வேண்டும். பிரதி பெற விரும்பின் செலவு கட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

## நீதிமன்ற அவமதிப்பு

நீதிமன்றச் சட்டக்கோவை பிரிவு 14ன்படி நீதிமன்ற அழைப்புக்கட்டளைகள் ஏற்க மறுத்தல், பொய்ச்சாட்சியம் சொல்லுதல், பொய்யான ஆவணங்களைக் கையளித்தல், நீதிமன்றத்தைத் தவறாக வழிநடத்த முயற்சித்தல், சாட்சியம் அளிக்கத் தவறுதல், நீதிமன்ற நடவடிக்கைகளைக் குழப்புதல், நீதிமன்றத் தீர்ப்புக்களைப் புறக்கணித்தல், கண்டனஞ் செய்தல், நீதிமன்ற உத்தியோகத்தர்களை அவமதித்தல், ஒரு வழக்கு நடவடிக்கையின் பொருட்டு எவருடைய பாதுகாப்பிலும் உள்ள ஏதேனும் ஒரு பொருளை அல்லது ஆவணத்தை குறித்த நீதிமன்றம் பார்வைக்குக் கையளிக்குமாறு கட்டளையிட்டால் அக்கட்டளைக்கு இணங்கி ஒழுகத் தவறுதல் போன்ற குற்றங்கள் புரிவோர் நீதிமன்ற அவமதிப்புக்குற்றத்திற்கு ஆளாவார்.

மேற்படி குற்றச்சாட்டிற்கு உட்படும் எவரும் நீதிமன்றம் முன் நிறுத்தப்பட்டு குற்றச்சாட்டு நேரில் தெரிவிக்கப்பட்டு ''சுருக்க முறை விசாரணையின்'' பின்னர் அவர் குற்றவாளியாகத் தீர்மானிக்கப்பட்டால் குற்றத்தன்மைக்கு ஏற்ப ரூபா 5000/= க்கு மேற்படாமல் குற்றப்பணம் அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

●●●

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# தமிழீழ நீதிமன்ற அமைப்பு விதிகள்.

1. ''தமிழீழ நீதிமன்றம்'' என இது அழைக்கப்படும்.

2. தமிழீழத் தேசியத் தலைவரின் நேரடிக்கட்டுப்பாட்டின் கீழ் சுதந்திர நீதிமன்றமாக இது இயங்கும்.

3. தேசியத் தலைவர் நீதி நிர்வாகத்துறையூடாக நீதிமன்றங்களை வழி நடத்துவார்.

4. நீதிமன்றங்களுக்கான நீதியாளர்கள், நீதிச்சேவை ஆணைக் குழு உறுப்பினர்கள் யாவரும் தமிழீழத் தேசியத் தலைவரினால் நியமனம் செய்யப்படுவார்கள்.

5. அ. தமிழீழத்தின் தேசியத் தலைவரினால் காலத்துக்குக்காலம் பிரகடனப்படுத்தப்படும் சட்டங்கள் வலிதுடையனவாக விளங்கும்.

   ஆ. தமிழீழ நீதிமன்றம் ஒன்றில்வழக்கு நடவடிக்கையில் தொடர்புடைய ஒருவர் தமிழீழச் சட்டக்கோவைக்கு அமையவே நியாயம் கோரலாம்.

   இ. குறித்த விடயம் ஒன்றில் ஏற்புடைய சட்டங்கள் எதுவும் இல்லாவிடில் நீதிச்சேவை ஆணைக்குழு அது தொடர்பாக ஆவன செய்யும்.

6. நீதியாளர்களின் இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கைகள், தமிழீழ தேசியத் தலைவரினால் மேற்கொள்ளப்படும்.

7. நீதிமன்ற அலுவலர்களின் நியமனம், இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கைகள் நீதிச்சேவை ஆணைக் குழுவினால் மேற்கொள்ளப்படும்.

8. தமிழீழ நீதிமன்றம் வாரத்தில் இரண்டு (2) நாட்கள் குற்றவியல் வழக்குகளையும் மூன்று (3) நாட்கள் குடியியல் வழக்குகளையும் விசாரணை செய்யும்.

9. ஒவ்வொரு வழக்கிலும் நீதிமன்றம் கட்டளையிடும் வழக்குச் செலவை குறித்த கட்சிக்காரர்கள் செலுத்துதல் வேண்டும்.



10. தமிழீழ நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்து பதிவு செய்து கொண்ட ''சட்ட அறிஞர்கள்'' மட்டுமே வழக்கு நடவடிக்கைகளில் தம் கட்சிக்காரர் சார்பில் தோன்றி வாதாடவும், ஆவணங்கள், தொகுப்புரைகள் சமர்ப்பிக்கவும் உரித்துடையவர்களாவார்கள்.

11. அ. வழக்கு நடவடிக்கைகளில் மேலதிக விளக்கங்கள் பெறும் பொருட்டும், நீதிமன்றத்திற்கு உதவிடும் பொருட்டும் நீதிச் சேவை ஆணைக்குழுவினால் ஒவ்வொரு நீதிமன்றுக்கும் ஒரு ''நிபுணர் குழு'' அமர்த்தப்படும். அதில்;

   1. வைத்திய அதிகாரி.
   2. சட்ட அறிஞர்
   3. பொறியியலாளர்
   4. நில அளவையாளர்
   5. பெரும் மதிப்பு மிக்க அறிஞர்

   ஆகியோ ஐந்து (5) நிபுணர்கள் இடம் பெறுவர்.

   ஆ. ''நிபுணர் குழு'' வெளிப்படை அமர்வில், செயற்பட மாட்டார்கள். நீதிமன்றத்தால் ஒப்படைக்கப்படும் விடயங்கள் தொடர்பாக தமது நிபுணத்துவ அறிக்கையை குறித்த நீதிமன்றுக்கு அனுப்பி வைப்பதே அவர்கள் கடமையாகும்.

## 12. மேன் முறையீடு

   அ. ஒரு நீதிமன்றத்தின் தீர்ப்பில் மனநிறைவு ஏற்படாத தரப்பினர் மேன் முறையீடு செய்யலாம்.

   ஆ. மேன் முறையீடு செய்பவர் மேன் முறையீட்டுக் கட்டணமாக ரூபா 1000/= செலுத்துதல் வேண்டும்.

   இ. தமிழீழத் தேசியத் தலைவரினால் நியமிக்கப்பட்ட நீதியாளர்களில் இருந்து நீதிச்சேவை ஆணைக்குழுவினால் தெரிவு செய்யப்படும் மூவர் (3) ஒன்றாக அமர்ந்து மேன் முறையீட்டுச்சபையாக இயங்குவர்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஈ. மேன் முறையீட்டுச்சபையினர் மூவரும் ஒன்றாக அமர்ந்து வழக்கு நடவடிக்கைத் தொகுப்பையும், தீர்ப்பையும் மறுபரிசீலனை செய்வார்கள். அவசியம் எனக் கருதினால் வழக்கின் எத்தரப்பினரையும் தம்முன் நேரில் அழைத்து கூடுதல் விளக்கங்களையோ, தகவல்களையோ பெற்றுக் கொள்ளவும் கூடுதல் சான்றுகளையோ, ஆவணங்களையோ ஒப்படைக்குமாறு கட்டளை இடவும் அதிகாரமுடையவர்கள்.

உ. மேன் முறையீட்டுச்சபையின் முடிவு குறித்த நீதிமன்றத்தின் மூலமே மேன் முறையீட்டுத் தீர்ப்பாக வழங்கப்படும்.

ஊ. மேன் முறையீட்டுத் தீர்ப்பே இறுதியானது என்பதுடன் அது தொடர்பானவர்களை முழுமையாகக் கட்டுப்படுத்தும் அதிகாரமும் உடையது.

13. அ. ஒரு வழக்கு நடவடிக்கையுடன் நேரடியாகத் தொடர்புடைய அல்லது குடும்ப உறவினர், நண்பர்கள் தொடர்புடைய வழக்கு எதனையும் அத்தகைய நீதியாளர் விசாரணை செய்ய முடியாது.

ஆ. அத்தகைய விசாரணைகள் தொடர்பாக நீதி நிர்வாகத் துறை பொருத்தமான மாற்று ஏற்பாடுகளைச் செய்யும்.

14. தமிழீழ நீதிமன்றத்தின் எண்ணிக்கையையும் அதன் நியாயாதிக்க எல்லையையும் தமிழீழத் தேசியத் தலைவர் காலத்திற்குக் காலம் தீர்மானித்து அறிவிப்பார்.

15. தமிழீழ நீதிமன்ற விசாரணைகளில் பின்வருவோர் விலக்களிக்கப்படுவார்கள்.

அ. தமிழீழ நீதிமன்ற நீதியாளர்கள்

ஆ. தமிழீழ காவல் துறையினர்.

இ. தமிழீழ விடுதலைப் புலிகள்.

மேற் குறிப்பிட்டோர் ''இராணுவ விசாரணை மன்றால்'' விசாரித்துத் தண்டிக்கப்படுவார்கள்.



16. எந்த ஒரு வழக்கு நடவடிக்கையிலும் நீதிமன்றில் தோற்றமளிப்பவர் ''தமிழீழத்திற்கான சத்தியப்பிரமாணத்தைச் செய்து கொண்ட பின்னரே நடவடிக்கையில் பங்குபற்றலாம்''

17. தமிழீழக் குடிமகன் அல்லாத ஒருவர் குற்றவியல் அல்லது குடியியல் தவறு தொடர்பாக காவல்துறையால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் விசாரணைக்கென நிறுத்தப்பட்டால் அவர் தொடர்பாக விசாரணைக்கான மாற்று ஏற்பாட்டை நீதிச்சேவை ஆணைக்குழு நெறிப்படுத்தும்.

18. அ. தமிழீழ நீதிமன்றில் தோன்றும் எவரும் அமைதியுடனும், பண்புடனும் நீதிமன்ற சட்ட திட்டங்களுக்கு இணங்கி நடப்பதுடன் நீதியாளரின் கட்டளைக்கும் பணிந்து ஒழுகவேண்டும்.

ஆ. தமிழீழ நீதிமன்றத்தின் அமைப்பு, நியாயாதிக்கம் என்பன பற்றி இச்சட்ட விதியின் பிரிவு 12க்குப் புறம்பாக எவரும் எத்தகைய ஆட்சேபனையையும் எவ்வேளையிலும் கிளப்ப முடியாது.

19. அ. தமிழீழ நீதிமன்றத்தின் தீர்ப்பு எதுவும் அனைத்துப் பிரிவினரையும் தமிழீழத்தில் உள்ள வேற்று நாட்டுக் குடிமக்களையும் கட்டுப்படுத்தும் தன்மை கொண்டது.

ஆ. தமிழீழ நீதிமன்றத்தின் தீர்ப்பு எதுவும் தமிழீழத்தின் எல்லைக்கு உட்பட்ட அனைத்து ஆவணங்கள், சொத்துக்கள் அனைத்தையும் அது எவருக்கு உரியதாக இருந்தாலும் அவற்றை எவ்வித வேறுபாடுமின்றி கட்டுப்படுத்தும் தன்மை கொண்டது.

20. தமிழீழ நீதிமன்ற அமைப்பு விதிகளில்

1. ''நீதிமன்றம்'' எனக் குறிப்பிடப்பட்டவை தமிழீழ நீதிமன்றம் எனப் பொருள்படும்.

2. ''நீதிச்சேவை ஆணைக்குழு'' என்பது தமிழீழ தேசியத் தலைவரினால் நியமிக்கப்பட்ட ''நீதிச்சேவை ஆணைக்குழு'' எனப் பொருள்படும்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

3, ''நீதியாளர்கள்'' என்பது தமிழீழ நீதிமன்ற நீதியாளர்கள் எனப்பொருள்படும்.

21. அ. தகுதி வாய்ந்த விசாரணை அமைப்பினால் ஏற்கனவே விசாரணை செய்யப்பட்டு, வழங்கப்பட்ட தீர்ப்பினை தொடர்புடைய தரப்பினர் ஏற்றுக்கொண்டிருப்பின் அவ் வழக்கினைத் தமிழீழ நீதிமன்றங்களில் தாக்கல் செய்ய முடியாது.

ஆ. 1987 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட பிணக்குகள் எதுவும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது. எனினும் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டு, இன்றுவரை முடிவுசெய்யப்படாத வழக்குகள், தொடர்புடைய ஆவணங்களுடன் புதிய வழக்குகளாக பதிவு செய்யப்படலாம்.

●●●



# தமிழீழச் சட்டக் கோவை

1. ''தமிழீழச் சட்டக் கோவை'' என அழைக்கப்படும்.

## 2. நியாயாதிக்கப்பிரிவு

தமிழீழ எல்லைப்பகுதிக்குட்பட்ட வரையறுக்கப்பட்ட ஒவ்வொரு பிரிவிற்கும் ஒவ்வொரு நீதிமன்றம் அமைக்கப்பட்டு அப்பிரிவுப் பெயரினால் அழைக்கப்படும். அப்பிரிவுக் குட்பட்ட அனைத்துக் குற்றவியல், குடியியல் வழக்குகளையும் இச்சட்டக்கோவைக்கு இணங்க விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் நியாயாதிக்கம் குறித்த நீதிமன்றத்திற்கு உண்டு.

## 3. பொதுவிளக்கங்கள்

அ. இச்சட்டக்கோவையில் ''நீதிமன்றம்'' எனக் குறிப்பிடப்படுபவை 'தமிழீழ நீதிமன்றம்' எனப் பொருள்படும்.

ஆ. இச்சட்டக்கோவையில் ''நீதியாளர்'' எனக்குறிப்பிடப்படுவது ''தமிழீழ நீதிமன்ற நீதியாளர்'' எனப்பொருள்படும்.

இ. இச்சட்டக்கோவையில் ''ஒருமை''யில் குறிப்பிடப்படுபவை சந்தர்ப்பத்திற்கு ஏற்ப ''பன்மைக்கும்'' பன்மையில் குறிப்பிடப்படுபவை சந்தர்ப்பத்திற்கு ஏற்ப ''ஒருமைக்கும்'' பொருந்தும்.

ஈ. வழக்கொன்றில் மேன் முறையீட்டுக்கு விண்ணப்பிப்பவர் நீதிமன்ற அமைப்பு விதிகளின் பிரிவு 12 (ஆ) வின்படி மேன் முறையீட்டுக்கட்டணமாக ரூபா. 1000/= ம் செலுத்த வேண்டும்.

உ. ''நிபுணர் குழுவின் அறிக்கையை'' கோரல் வேண்டுமென விண்ணப்பிக்கும் தரப்பினர் அதற்குரிய கட்டணமாக ரூபா. 1500/= செலுத்தவேண்டும்.

ஊ. சட்டக்கோவையில் ''காவல்துறை'' எனக் குறிப்பிடப்படுவது ''தமிழீழ காவல்துறை'' எனப் பொருள்படும்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## 4. அழைப்புக் கட்டளைகள் சேர்ப்பித்தல்

1. நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கை ஒன்றிற்காக எவரேனும் ஒருவரை வருகை தருமாறு விடுக்கப்படும் அழைப்புக் கட்டளைகள் பின்வரும் வழிகளில் பொருத்தமான முறையில் சேர்ப்பிக்கப்படும்
   அ. பதிவு அஞ்சல் மூலம்
   ஆ. கிராமசேவை அலுவலர் மூலம்
   இ. காவல்துறையினர் மூலம்
   ஈ பகிரங்க அறிவித்தல் மூலம்.

2. நீதிமன்ற அழைப்புக் கட்டளை கிடைக்கவில்லை என்ற வாதம் குற்றப்பொறுப்பை இல்லாததாக்கவோ, நீதிமன்றத் தீர்ப்பை இல்லாததாக்கவோ அல்லது வேறு எந்த நிவாரணத்தையும் கோரவோ எவருக்கும் வாய்ப்பளிக்காது. எனினும் இவ்விடயத்தில் நீதிமன்றம் பொருத்தமான கட்டளையை வழங்கும்.

## 5. நீதிமன்றத்தில் தோன்றத்தவறுதல்

அ. வழக்கு நடவடிக்கைக்காக நீதிமன்றில் தோன்றுமாறு அழைப்புக்கட்டளை விடுக்கப்பட்ட எவரும், அவ்வாறு தோன்றத் தவறின் இச்சட்டக்கோவையின் பிரிவு 14க்கு அமைய தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்.

ஆ. நீதிமன்றுக்கு வருகைதர முடியாதளவிற்கு ஒருவர் உடல் நிலை அல்லது மன நிலை ஊறுபட்டிருந்தால் அதை தகுந்த வைத்தியஅதிகாரி மூலம் சான்றுபடுத்தி அந்த வைத்திய அறிக்கையை குறித்த வழக்கு கூப்பிட்டவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

இ. ஏனைய காரணிகள் விடயத்தில் நீதிமன்றம் பொருத்தமான கட்டளையை வழங்கும்.

## 6. பிடியாணை

அ. நீதிமன்றின் அழைப்புக் கட்டளைக்கு அமைய வருகை தரத் தவறும் எவருக்கு எதிராகவும் நீதிமன்றம் பிடியாணை விடுக்கலாம்.



ஆ. பிடியாணை விடப்பட்ட ஒருவரைக் கைது செய்வதற்குத் தேவையான தகவல்களைத் தரும் எவரும் அன்பளிப்புத் தொகை ஒன்றைப் பெற உரித்துடையவராவார்.

இ. பிடியாணை விடப்பட்ட ஒருவரை தெரிந்துகொண்டே மறைத்து வைத்திருக்கும் எவரும் இச்சட்டக்கோவையின் பிரிவு 14க்கு அமைய தண்டனைக்குட்படுத்தப்படுவார்.

ஈ. பிடியாணை விடப்பட்ட பின்னர் கைது செய்யப்படும் எவரும் அல்லது நீதிமன்றில் தானாகத் தோன்றும் எவரும் இச்சட்டக்கோவையின் பிரிவு 14க்கு ஆன குற்றப்பொறுப்புடன் மேலதிகமாக ரூபா. 1000/=க்கு மேற்படாத அபராதம் செலுத்த வேண்டும்.

## 7. பிணை

குற்றச்சாட்டின் தன்மைக்கும், சந்தேக நபர் பற்றிய காவல் துறையினரின் அறிக்கைக்கும் ஏற்ப சந்தேக நபர் ஒருவரை பிணையில் விடுவதற்கோ, தடுப்புக் காவலில் வைப்பதற்கோ நீதிமன்றம் கட்டளையிடலாம். தடுப்புக்காவலில் உள்ள சந்தேக நபரை பிணையில் விடுமாறு நீதிமன்றத்தினை திருப்திப்படுத்தக்கூடிய காரணங்களைக்காட்டி சட்ட அறிஞர் பிணை மனுவைக் கையளிக்கலாம். நீதிமன்றம் பிணை மனு தொடர்பாக பின்வருமாறு தீர்மானிக்கலாம்.

அ. பிணை மனுவை முற்றாக நிராகரிக்கலாம்.
ஆ. சொந்தப் பிணையில் விடலாம் அல்லது
இ. ஆட்பிணையில் விடலாம் அல்லது
ஈ. நிபந்தனைக்குட்பட்ட பிணையில் விடலாம்.
* பிணையில் விடுவதாயின் அதற்குரிய நிபந்தனைகளை சந்தேக நபரும் பிணையாளியும் ஒழுகி நடப்பதை காவல் துறையினரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

## 8. எதிரிகளின்றி விசாரணை

அ. ஒரு வழக்கில் எதிரிகளில் எவரும் அல்லது முழுப்பேரும் வருகைதரத்தவறும் போது, நீதிமன்றம் நியாயமெனக்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கருதினால் எதிரிகளின்றியே விசாரணையைத் தொடர்ந்து நடாத்தி தீர்ப்பை வழங்கலாம். இவ்வாறு வழங்கப்படும் தீர்ப்பு முழுச் சட்ட வலுவுடையதாக விளங்கும்.

ஆ. இவ்வகையான ''ஒருமுகத் தீர்வையின்'' தீர்வைப் பிரதி வழக்கில் பங்குபற்றாத கட்சிக்காரருக்குச் சேர்ப்பிக்கப்படவேண்டும். இப்படிச் சேர்ப்பித்தபின் அத்தகையவர் தான் நீதிமன்றில் தோன்றாததற்கு நியாயமான காலத்தினுள் தகுந்த காரணம் காட்டுமிடத்து நீதிமன்றம் இவ் வழக்கை மீள விசாரிக்கலாம்.

## 9. குற்றவரைவிலக்கணம்

அ. குற்றம் விளைவிக்கும் எண்ணத்துடனும் மனக்கருத்துடனும் ஏதாவது ஒரு செயலைச் செய்வதன் மூலம், மற்றவருக்கு அல்லது சமுதாயத்திற்கு ஊறு ஏற்படுத்தும் எதுவும் குற்றமாகக் கருதப்படும்.

ஆ. குற்றம் விளைவிக்கும் எண்ணத்துடனும் மனக்கருத்துடனும் ஏதாவது ஒரு செயலை செய்யாது விடுவதன் மூலம் மற்றவருக்கு அல்லது சமுதாயத்திற்கு ஊறு ஏற்படுத்தும் எதுவும் குற்றமாகக் கருதப்படும்.

## 10. தண்டனைத் தவிர்ப்புக்கள்

அ. 8 வயதிற்குட்பட்ட குழந்தைகள்.

ஆ. மன நிலை பாதிக்கப்பட்டவர்கள்.

மேற்கண்டோர் தொடர்பாக பொருத்தமான வேறு ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும்.

## 11. குற்றப்பிரிவு

அ.
1. திருட்டு, கொள்ளை.
2. ஆதனக் கையாடல்.
3. களவாடப்பட்ட ஆதனத்தைப் பெறுதல்.
4. மோசடி, ஏமாற்றுதல்.
5. வர்த்தக மோசடி.



6. நம்பிக்கைத் துரோகம்.
7. மோசடியான ஆவணங்கள்.
8. பொது அமைதிக்கு எதிரான தவறுகள்.
9. அச்சுறுத்திப் பெறுதல்.
10. காயம் விளைவித்தல்.
11. சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல்.
12. அவதூறு.
13. பொது சுகாதாரத்திற்கு இடையூறு விளைவித்தல்.
14. போதைப்பொருள் உற்பத்தி, கடத்தல், விற்பனை.
15. போதைப்பொருள் பாவனை.
16. தேசத்துரோகம்.
17. சாதிக்கொடுமை.
18. ஆள் கடத்தல் / சிறார் அடிமை.
19. தொழில் பிணக்குகள்.
20. கடமை செய்யவிடாது தடுத்தல், கடமையைப் புறக்கணித்தல்.
21. இலஞ்சம்.
22. ஊழல்.
23. கொலை.
24. குடும்பப்பிணக்கு.
25. விபச்சாரம்.
26. சீதனக்கொடுமை.
27. கருச்சிதைவு, சிசுக்கொலை, பாலியல் வன்முறை.
28. இயற்கைக்கு விரோதமான தவறுகள்.
29. சமய சம்பந்தமான தவறுகள்.
30. குற்றமுறையான அத்துமீறல் / அச்சுறுத்தல்.
31. தற்காப்பு உரிமையின் எல்லை மீறல்.
32. நீதிமன்ற அவமதிப்பு.
33. கடன் பொறுப்புக்கள்.
34. குற்ற உடந்தை.
35. ஏனையவை.

அ. ''போக்குவரத்து விதிகளை மீறல்'' தொடர்பான குற்றங்களுக்காக தண்டப்பணங்களை தமிழீழ காவல் துறையினர் நீதிமன்ற விசாரணையின்றியே அறவிடலாம்.

ஆ. எனினும் மேற்காட்டிய பிரிவுக் குற்றத்தை ஒருவர் ஏற்க மறுத்தால் அவர் நீதிமன்றம் முன் விசாரணைக்கென நிறுத்தப்படல் வேண்டும்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இ. இச்சட்டக்கோவைக்கு இணங்கவும் தமிழீழ தண்டனைச் சட்டக் கோவைக்கு இணங்கவும் குற்றவாளியாகக் காணப்படும் ஒவ்வொருவரதும் குற்றத்தன்மை, குற்றப்பொறுப்பு, நடத்தை, குடும்ப நிலை என்பவற்றிற்கு ஏற்ப நீதிமன்றம் ஒப்புரவும், நியாயமும் எனக் கருதும் தண்டனையை விதிக்கலாம்.

## 12. குற்றத்திற்கு துணை புரிதல்

ஒரு குற்றச்செயலில் நேரடியாகத் தொடர்புடையவர் மட்டும் அல்லாது குறித்த குற்றச்செயலுக்கு உடந்தையாக இருந்தவர்களும் தண்டனைக்குட்படுத்தப்படுவார்கள்.

## 13. கடும் தண்டனைக்குரிய குற்றங்கள்

அ. கொலை.
ஆ. பாலியல் வன்முறை.
இ. தேசத்துரோகம்.
ஈ. சாதிக்கொடுமை.
ஊ. போதைப்பொருள், உற்பத்தி, கடத்தல், விற்பனை.

## 14. நீதிமன்ற அவமதிப்பு.

அ. நீதிமன்ற அழைப்பாணைகளை ஏற்க மறுத்தல், பொய்ச் சாட்சியம் சொல்லுதல், பொய்யான ஆவணங்களை சமர்ப்பித்தல், நீதிமன்றத்தை தவறாக வழிநடத்த முயற்சித்தல், சாட்சியம் அளிக்க தவறுதல், நீதிமன்ற நடவடிக்கைகளைகுழப்புதல், நீதிமன்றத் தீர்ப்புக்களைப் புறக்கணித்தல், கண்டனம் செய்தல், நீதிமன்ற உத்தியோகத்தர்களை அவமதித்தல் என்பன நீதிமன்ற அவமதிப்பாகக் கருதப்படும்.

ஆ. ஒரு வழக்கு நடவடிக்கையின் பொருட்டு எவருடைய பாதுகாப்பிலும் உள்ள ஏதேனும் ஒரு பொருளை அல்லது ஆவணத்தை குறித்த நீதிமன்றம் பார்வைக்கு ஒப்படைக்குமாறு கட்டளையிட்டால் அக்கட்டளைக்கு இணங்கி ஒழுகத்தவறும் எவரும் நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்திற்கு ஆளாவார்.



இ. நீதிமன்ற அவமதிப்புத் தொடர்பான குற்றச்சாட்டிற்கு உட்படும் எவரும் நீதிமன்றம் முன் நிறுத்தப்பட்டு குற்றச்சாட்டு நேரில் தெரிவிக்கப்பட்டு "சுருக்க முறை" விசாரணையின் பின்னர் அவர் குற்றவாளியாக தீர்மானிக்கப்பட்டால் குற்றத்தன்மைக்கு ஏற்ப ரூபா. 5000/= க்கு மேற்படாமல் குற்றப்பணம் அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

## 15. அ. தண்டனை வகைகள்

குற்றவாளிகளைத் திருத்தி நற்குடிகளாக்கும் நோக்கத்தில் பின்வரும் தண்டனைகள் விதிக்கப்படலாம்.

1. தண்டம்.
3. சிறைத்தண்டனை - இது இரண்டு வகைப்படும்.
   1. கட்டாய சமூக வேலை
   2. கடூழிய மறியல்.

ஆ. 1. கடுங்குற்றவாளிகள் கடூழியச் சிறைத்தண்டனைக்கு உட்படுத்தப்படுவர்.
2. சாதாரண குற்றவாளிகள் சிறைத்தண்டனைக்குப் பதிலாக;
   * கட்டாய சமூக சேவைக்கு தமது உடல் உழைப்பை வழங்குமாறு கட்டளையிடப்படுவார்கள். இவர்களுக்கு உரிய கடமை நிபந்தனைகளை நீதிமன்றம் காவல்துறையூடாகச் செயற்படுத்தும்.

## 16. சந்தேக நபர் தொடர்பான நடவடிக்கை

குற்றவியல் குற்றச்சாட்டு தொடர்பாக தமிழீழக்காவல்துறையால் கைது செய்யப்படும் சந்தேக நபர்கள் காவல்துறையின் ஆரம்ப விசாரணையின் பின்னர் அப்பிணக்கை சமரசமாகத் தீர்த்து வைக்க முடியாதவிடத்து அண்மையில் உள்ள நீதிமன்றின் முன் நிறுத்தப்படவேண்டும்.
எக்காரணம் கொண்டும் ஒரு சந்தேக நபரைத் தொடர்ந்து 48 மணித்தியாலத்திற்கு மேலாக காவல் நிலையத்தில் தடுத்து வைக்க முடியாது. அவ்வாறான தேவை ஏற்படின் நீதிமன்றத்தின் விசேட கட்டளையை காவல்துறைப்பொறுப்பாளர் பெற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# குற்றவியல் வழக்கு நடவடிக்கை முறைகள்

## விசாரணைகள் நடைமுறைகள்

1. குற்றவியல் நடவடிக்கைகள்யாவும் காவல்துறையின் பொறுப்பாளரால் அல்லது அவரின் சார்பில் அவரது பிரதிநிதியாலேயே நீதிமன்றத்தில் தொடுக்கப்படவேண்டும்

அ. குடும்ப வழக்குகள், பாலியல், பாலியல்வன்முறை என்பன தவிர்ந்த ஏனைய அனைத்து வழக்கு விசாரணைகளும் பகிரங்கமாக நடத்தப்படுவதுடன் பொது மக்கள் வழக்கு நடவடிக்கைகளை அவதானிக்கவும் வசதிகள் செய்யப்படவேண்டும். முதலில் வழக்குத் தொடுப்பவர் நீதிமன்றத்தில் தோன்றி குற்றச்சாட்டை எடுத்துரைப்பார். அதைத் தொடர்ந்து எதிரிக்கூண்டில் நிற்கும் சந்தேக நபர்களின் மறுமொழி ஒவ்வொருவரிடமும் கேட்கப்படும். குற்றச்சாட்டை எதிரிகள் ஏற்றுக்கொண்டால் - அதில் நீதிமன்றம் திருப்தியடைந்தால் அத்துடன் வழக்கு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு நீதிமன்றினால் தீர்ப்பு வழங்கப்படும். குற்றச்சாட்டை எதிரிகள் மறுப்பின் மறுதவணையில் சாட்சிகள் அழைக்கப்பட்டு, சாட்சியங்கள் குறுக்கு விசாரணைகள் பதிவு செய்யப்படும். அத்துடன் எதிரிகளின் விளக்கங்கள் பதியப்படும். இதன் பின்னர் எதிரிகள் சார்பிலும், வழக்காளிகள் சார்பிலும் தொகுப்புரைகள் நிகழ்த்தப்படும். தொகுப்புரை முடிவுற்ற பின்னர் நீதிமன்றம் தனது தீர்ப்பை வழங்கும்.

ஆ. வழக்கு நடவடிக்கையில் தமது பக்க நியாயத்தை எடுத்துரைப்பதற்காகவும் ''குற்றம் செய்யாதவர் தண்டிக்கப்படக்கூடாது'' என்ற உலக நீதிக்கோட்பாட்டிற்கு அமையவும் வழக்கின் கட்சிக்காரர் ஒவ்வொருவர் சார்பிலும் சட்ட அறிஞர்கள் தோன்றி வாதிடலாம். பணவசதியற்ற எதிரி தமக்காகச்சட்ட அறிஞரை ஒழுங்கு செய்து தருமாறு நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்தால் நீதிமன்று நியாயமெனக் கருதினால் சட்ட அறிஞரை ஏற்பாடு செய்து கொடுக்கும்.



## 1. நிபுணர் குழுவினர்

அ. சிக்கலான வழக்குகள் தொடர்பான மேலதிக விளக்கங்கள் பெறுவதற்காக நீதிமன்றம் அவசியம் எனக் கருதினால் ''நிபுணர் குழுவினர்'' அறிக்கையைப் பெற்று அதன் பின்னர் தீர்ப்பு வழங்கலாம்.

ஆ. ''நிபுணர் குழு'' அறிக்கையைக் கோரவேண்டுமென வழக்கின் தரப்பினர் விண்ணப்பித்தால் அதற்குரிய செலவுகளை அத்தரப்பினரிடம் அறவிட்டு நிபுணர் குழு அறிக்கையைப் பெற்று அதன் பின்னர் தீர்ப்பளிக்கலாம்.

## 3. மேன் முறையீடுகள்

அ. வழக்கின் தீர்ப்பில் திருப்தி அடையாத எவரும் தமிழீழ நீதிமன்ற அமைப்பு விதிகள் 12க்கு அமைய மேல் விசாரணைக்கு அனுமதிகோரி தீர்ப்பு வழங்கப்பட்ட பதினாலு (14) நாட்களுக்குள் நீதிமன்றத்தைத் திருப்திப்படுத்தக் கூடிய காரணிகளை எழுத்தில் சமர்ப்பித்தால், நீதிமன்றம் மேல் விசாரணைக்கு ஒப்புதல் வழங்கும். அவ்வாறு ஒப்புதல் வழங்கப்பட்ட நாளில் இருந்து அடுத்த 21 நாட்களுக்குள் ''வழக்கைப் பற்றியும், தனது தரப்பு நியாயத்தைப் பற்றியும்'' முழுமையான விளக்கவுரை ஐந்து (5) பிரதிகளில் எழுத்துமூலம் தயாரித்து மேல் விசாரணைக்கான செலவுக் கட்டணத்துடன் குறித்த நீதிமன்றில் ஒப்படைக்க வேண்டும்.

ஆ. மேன் முறையீட்டுச் சபையினர் தாம் பொருத்தமெனக் கருதும் முறையில் மேல் விசாரணைகளைச் சுதந்திரமாக மேற்கொண்டு அடுத்த ஆறு (6) மாதங்களுக்குள் தமது குழுவின் முடிவை நீதிமன்றுக்கு எழுத்து மூலம் தெரிவிப்பர். குழுவின் முடிவிற்கமைய நீதிமன்று மேல் விசாரணைத்தீர்ப்பை வழங்கும். இத்தீர்ப்பு இறுதியானதும் மாற்ற முடியாததுமாகும்.

## 4. கருணை மனு

1. எந்த ஒரு குற்றச்சாட்டிலும் ரூபா. 1,00,000/= க்கு மேல் அபராதம் விதிக்கப்பட்ட அல்லது 5 வருடங்களுக்கு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மேற்பட்ட கடுழியச்சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகள் எவரும் தமது தவறுக்கு மன்னிப்புக் கோரி தண்டனையைக் குறைக்குமாறு "தமிழீழ தேசியத் தலைவருக்கு" குறித்த நீதிமன்றில் கருணைமனு சமர்ப்பிக்கலாம். தலைவரின் கட்டளை நீதிமன்று ஊடாக பகிரங்கப்படுத்தப்படும்.

2. மாவீரர் தினத்தை முன்னிட்டு வருடந்தோறும் தமிழீழ தேசியத் தலைவர் குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்ட தண்டனைகளைக் குறைக்கவோ மன்னிப்பு வழங்கவோ ஒரு பிரகடனத்தை வெளியிடலாம்.

## 5. வழக்குச் செலவுகள்.

அ. ஒவ்வொரு வழக்கு நடவடிக்கையிலும் நீதிமன்றினால் விதிக்கப்படும் வழக்குச் செலவுகளை குறித்த தரப்பினர் செலுத்த வேண்டும்.

ஆ. வழக்குச் செலவை ஒருவர் செலுத்த முடியாதபோது அதற்குப் பதிலாக அவரை கட்டாய சமூக சேவை செய்யுமாறு நீதிமன்றம் கட்டளையிடலாம்.

## 6. தனிப்பட்ட வழக்குகள்.

அ. தமிழீழச் சட்ட விதிகளுக்கு உட்பட்ட எந்தவொரு குற்றவியல் வழக்குகளையும் காவல்துறை ஊடாக தாக்கல் செய்ய விரும்பாத எவரும் தனிப்பட்ட வழக்காக நீதிமன்றில் தொடுக்கலாம்.

ஆ. மேற்குறிப்பிட்ட வழக்கிற்கான முழுச்செலவுத் தொகையையும் வழக்காளியே செலுத்த வேண்டும்.

●●●



# குடியியல் வழக்கு நடவடிக்கை முறைகள்

1. அ. குடியியல் வழக்குகள் யாவும் தனிப்பட்ட முறையில் வழக்காளியாலேயே தொடரப்படல் வேண்டும்.

ஆ. வழக்கின் பெறுமதியில் 5 சத வீதம் "தமிழீழ நிவாரண வரி" யாகச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் பின்வரும் ஆவணங்களைத் தேவையான பிரதிகளுடன் ஒப்படைக்க வேண்டும்.

வழக்கு அறிக்கை - இரு பிரதிகள்.

எதிரிக்கான அழைப்புக் கட்டளை நான்கு (4) பிரதிகள்.

சாட்சிக்கான அழைப்புக்கட்டளை நான்கு (4) பிரதிகள்.

சட்ட அறிஞர் நியமனம்.

தொடர்புடைய ஆவணங்களின் பிரதிகள் இரு பிரதிகள்.

உரிமைக் கோரிக்கைக்கான தொகுப்பு அறிக்கை இரு பிரதிகள்.

இ. ஒன்றுக்கு மேற்பட்ட எதிரிகள், சாட்சிகள் இருப்பின் வழக்கு அறிக்கையின் பிரதிகள்... எதிரிகள் தொகையை விட ஒன்று அதிகமாகவும்.

எதிரிகளுக்கான அழைப்புக் கட்டளைகள் ஒவ்வொரு எதிரிக்கும் நான்கு (4) பிரதிகள் வீதம்.

சாட்சிகளுக்கான அழைப்புக் கட்டளை ஒவ்வொரு சாட்சிக்கும் நான்கு (4) பிரதிகள் வீதம்.

உரிமைக் கோரிக்கையின் தொகுப்பு அறிக்கையின் பிரதிகள் எதிரிகள் தொகையை விட ஒன்று அதிகமாகவும்.

நீதிமன்றப் பதிவாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

* நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படும் பிரதிகள் யாவும் சட்ட அறிஞரால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

* நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு ஆவணத்திற்கும் "ஆவணப்பதிவு"க் கட்டணமாக ரூபா. 5/= செலுத்தப்படவேண்டும்.

2. அ. குடியியல் வழக்கொன்றில் தேவைப்படுத்தப்பட்ட பூரண ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறினால் அல்லது விதிக்கப்பட்ட கட்டணங்கள் செலுத்தத் தவறினால்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அவ்வழக்கைத் தள்ளுபடி செய்யும் உரிமை நீதிமன்றத்திற்கு உண்டு.

ஆ. எனினும் நீதிமன்ற அனுமதி பெற்று இரண்டாம் முறையாகவும் தேவைப்படுத்தப்பட்ட சகல நிபந்தனைகளையும் பூர்த்தி செய்து உரிய கட்டணத்தைச் செலுத்தி அதே வழக்கை மீண்டும் தாக்கல் செய்யலாம்.

இ. நீதிமன்றில் ஒரு குறித்த வழக்கு நடவடிக்கைக்காக செலுத்தப்பட்ட கட்டணம் எதுவும் எக்காரணம் கொண்டும் மீளளிக்கவோ வேறு வழக்கிற்கு மாற்றவோ முடியாது.

3. குடியியல் வழக்கொன்றில் சாட்சி ஒருவருக்கு செலவு தொகை எதுவும் வழங்கப்படவேண்டுமென நீதிமன்றம் தீர்மானிப்பின் குறித்த சாட்சியை அழைத்த தரப்பினரே நீதிமன்றில் இதனைச் செலுத்த வேண்டும்.

## 4. குடியியல் வழக்கு விசாரணை நடைமுறைகள்.

அ. வழக்குத் தாக்கல் செய்யப்படும் அன்று வழக்காளி மேற்கூறிய 01ம் பிரிவினை தேவைப்படுத்தியிருப்பதாக நீதிமன்றம் திருப்திப்பட்டால், எதிரிகள் சமுகம் அளிப்பதற்காக 14 நாட்களுக்குக் குறையாத ஒரு திகதிக்கு வழக்கினைத் தவணையிடும்.

ஆ. எதிரிகள் தோற்றமளிக்கவேண்டிய தினத்தில் தோற்றமளித்திருப்பின் ஒவ்வொரு எதிரிகளிடமும் பின்வரும் ஆவணப்பிரதிகள் வழங்கப்படும்.
1. வழக்கு அறிக்கை.
2. உரிமைக்கோரிக்கைக்கான தொகுப்பு அறிக்கை.

இ. நீதிமன்றம் எதிரிகளுக்கு இப்பிரிவின் உப பிரிவு (ஆ)ன் படி ஆவணப் பிரதிகள் வழங்கப்பட்டால் அத்தினத்தில் இருந்து 30 நாட்களுக்குக் குறையாத ஒரு திகதிக்கு



எதிரிகள் மறுமொழி அணைப்பதற்காக வழக்கைத் தவணையிடும்.

ஈ. எதிரிகள் மறுமொழி அணைக்கப்படவேண்டிய திகதியில் நீதிமன்றில் தோன்றி பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.
1. மறுமொழியின் இரு பிரதிகள்.
2. சாட்சிகளுக்கான அழைப்புக் கட்டளைகள் (ஒரு சாட்சி பெயருக்கு நான்கு (4) பிரதிகள் வீதம்)
3. சட்ட அறிஞர் நியமனம்.
4. தொடர்புடைய ஆவணங்கள் இரு பிரதிகள்.
5. மறுப்புக்கோரிக்கைக்கான தொகுப்பு அறிக்கை இரு பிரதிகள்.

உ. எதிரிகள் மறுமொழி அணைத்த தினத்தில் வழக்காளியிடம் பின்வரும் ஆவணப்பிரதிகள் வழங்கப்படும்.
1. மறுமொழி அறிக்கை.
2. மறுப்புக்கோரிக்கைக்கான தொகுப்பு அறிக்கை.
இத்தினத்தில் இருந்து 30 நாட்களுக்குக் குறையாத ஒரு திகதி ''முதல் விளக்கத்திற்கு என'' குறிக்கப்பட்டு சாட்சிகளுக்கு அழைப்புக் கட்டளை விடுக்கப்படும்.

ஊ. ''முதல் விளக்கத் தினத்தன்றும்'' விளக்கங்கள் தொடர்ந்து நடைபெறும் தினங்களிலும் வழக்காளி, எதிராளி, சாட்சிகள் நீதிமன்றில் கட்டாயமாக பிரசன்னமாகி இருக்க வேண்டும்.

எ. முதல் விளக்கத் தினத்தன்று வழக்கு கூப்பிட்டவுடன் வழக்காளியோ, எதிராளியோ மேலதிக ஆவணங்களையோ, மேலதிக உரிமைக்கோரிக்கைத் தொகுப்பு அறிக்கையையோ, மேலதிக மறுப்புக் கோரிக்கைக்கான தொகுப்பு அறிக்கையையோ தேவையான பிரதிகளுடன் நீதிமன்றில் சமர்ப்பிக்கலாம். அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டால் முதல் விளக்கமானது 30 நாட்களுக்குக் குறையாத தினத்திற்கு ஒத்தி வைக்கப்படல் வேண்டும்.

ஏ. முதல் விளக்கத்தினத்தன்று முதலில் வழக்காளியின் சட்ட அறிஞர் வழக்காளியின் சார்பில் உரிமைக்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கோரிக்கைக்கான தொகுப்பு அறிக்கை பற்றி தெளிவுரை நிகழ்த்துவார். அதனைத் தொடர்ந்து எதிரிகளின் சட்ட அறிஞர் எதிரிகள் சார்பில் மறுப்புக்கோரிக்கைக்கான தனித்தனியான தொகுப்பு அறிக்கை பற்றி தெளிவுரை நிகழ்த்துவார். முதலாம் விளக்கம் பூரணமான தினத்தில் இருந்து 30 நாட்களுக்குக் குறையாத ஒரு தினத்தில் இரண்டாம் விளக்கம் நடைபெறும்.

ஐ. இரண்டாம் விளக்க தினத்தன்று வழக்கெழு வினாக்கள் எழுப்பப்பட்டு வழக்காளி தரப்புச் சாட்சிகளும் அதன் பின்னர் எதிரிகள் தரப்புச் சாட்சிகளும் சட்ட அறிஞர்களால் நெறிப்படுத்தப்படுவார்கள். இதனைத் தொடர்ந்து நீதிமன்றம் தேவை எனக் கருதினால் குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கலாம். இரண்டாம் விளக்கம் பூரணமான தினத்தில் இருந்து 30 நாட்களுக்குக்குறையாத ஒரு தினத்தில் மூன்றாம் விளக்கம் நடைபெறும்.

ஒ. மூன்றாம் விளக்கத் தினத்தன்று ஒவ்வொரு தரப்பு சட்ட அறிஞர்களும் தமது தொகுப்பு உரைகளை எழுத்து மூலம் சமர்ப்பிக்க வேண்டும். நீதிமன்றத்தின் விசேட அனுமதி பெற்று எழுத்து மூல தொகுப்பு உரைக்கு ஆதரவான வாய்மூல விளக்கங்களும் கொடுக்கலாம்.

ஓ. மூன்றாம் விளக்கம் பூரணமான தினத்தில் இருந்து 60 நாட்களுக்கு மேற்படாத ஒரு திகதியில் நீதிமன்றம் தனது தீர்ப்பை வழங்கும்.

5. அ. தமிழீழ நீதிமன்ற அமைப்பு விதிகள் பிரிவு 11 க்கு அமைய ''நிபுணர் குழு'' குடியியல் வழக்குகளுக்கும் ஏற்ற விதத்தில் பொருந்தும்.

ஆ. நீதிமன்ற அமைப்பு விதிகள் பிரிவு 12 க்கு அமைய ''மேன் முறையீடுகள்'' குடியியல் வழக்குகளுக்கும் ஏற்ற விதத்தில் பொருத்தமுடையதாகும்.

●●●



# குடியியல் தவறுகளும், நிவாரணங்களும்

## 1. வாடகைக் குடியிருப்பு

அ. வீட்டின் சொந்தக்காரர் ஒருவர் தனது வீட்டையோ அல்லது வீட்டின் ஒரு பகுதியையோ இன்னொருவருக்கு வாடகைக்குக் கொடுக்கும்போது நியாயமான ஒரு தொகையை வாடகையாக நிர்ணயித்து ஆறு (6) மாதங்களுக்கு மேற்படாத காலப்பகுதிக்கான வாடகைப் பணத்தினை முற்பணமாகக் கோரிப்பெறலாம். வாடகை ஒப்பந்தம் பூரண விபரங்களை உள்ளடக்கி எழுத்தில் தயாரிக்கப்பட்டு இரு பகுதியினரிடமும் பிரதிகள் வழங்கப்படல் வேண்டும்.

ஆ. வாடகை ஒப்பந்தம் காலாவதியானால் அல்லது குடியிருப்பாளர் வாடகை ஒப்பந்தத்தினை மீறினால் வாடகைக் குடியிருப்பாளரை குறித்த ஆதனத்தில் இருந்து வெளியேறுமாறு எழுத்து மூலம் வீட்டின் சொந்தக்காரர் கோரலாம். இவ்வாறான சந்தர்ப்பத்தில் ஆகக்கூடியது ஆறு ( 6 ) மாத கால தவணை வழங்கப்படலாம்.

இ. வாடகைக்குடியிருப்பாளர் எவரும் எக்காரணம் கொண்டும் வீட்டை உரிமை கொண்டாட முடியாது. எனினும் இரு பகுதியினரும் சமரச இணக்கத்துடன் ''வாடகைக் கொள்வனவு'' மூலம் உரித்தை மாற்றிக் கொள்ளலாம்.

ஈ. வாடகைக் குடியிருப்பாளரை வெளியேற்றும் நோக்கில் வீட்டின் சொந்தக்காரர் எதுவித இடையூறும் விளைவிக்கக்கூடாது.

உ. இரு பகுதியினருக்கும் இடையே பிணக்கு ஏற்பட்டால் பிணக்கு ஏற்பட்ட நாளில் இருந்து செலுத்தவேண்டிய வாடகைப் பணத்தை அண்மையில் உள்ள நீதிமன்றத்தின் ஊடாகச் செலுத்தி வரவேண்டும்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஊ. வாடகைக் குடியிருப்பாளர் ஒருவர் எக்காரணம் கொண்டும் தான் வாடகைக்கு இருக்கும் கட்டிடத்தையோ அல்லது அதன் ஒரு பகுதியையோ வேறு எவருக்கும் எந்த நோக்கத்திற்காகவும் பாவனை செய்வதற்காக அனுமதிக்கக்கூடாது.

எ. மேற்படி பிரிவுகள் அனைத்து ஆதனங்களுக்கும், குடியிருப்பு வீடுகளுக்கும், வர்த்தக நிறுவனங்களுக்கும் ஏனையவற்றிற்கும் ஏற்ற விதத்தில் பொருத்தமுடையதாகும்

## 2. ஆதனத்தை ஒப்படைத்தல்

நீதிமன்றம் ஒன்று குறித்த ஆதனம் ஒன்றை குறித்த திகதியில் தான் கட்டளையிடும் ஒருவரிடம் ஒப்படைக்குமாறு தீர்ப்பளித்தால் அதனை மீறும் எவரும் மேலதிகமாக நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்திற்கும் பொறுப்பாளியாவார்.

## 3. சொரியல் ஆதனத்தை பிரிவிடுதல் செய்தல்

அ. பலருக்குச் சொந்தமான சொரியல் ஆதனம் ஒன்றை பிரிவிடுதல் செய்யுமாறு பங்காளருள் எவரும் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யின் ஏனைய பங்காளருக்கு கட்டளை விடப்பட்டு எல்லாப் பங்காளர்களின் கோரிக்கைகளும் பரிசீலனை செய்யப்பட்ட பின்னர் நீதிமன்றம் நில அளவையாளர் மூலம் அளப்பனவு செய்து படம் வரைந்து நொத்தாரிசு மூலமான இணக்கப் பிரிவிடல் செய்யும்.

ஆ. பங்காளர்களில் எவராவது நீதிமன்றத்திற்குச் சமுகம் அளிக்கத் தவறின் அல்லது பங்காளர்களிடையே பிரிவிடுதல் தொடர்பில் கருத்து வேற்றுமை காணப்படின் நீதிமன்றம் தான் நியாயம் எனக் கருதும் முறையில் பிரிவிடுதல் கட்டளையை நிறைவேற்றும்.

இ. பிரிவிடுதல் செய்யப்படும் ஆதனங்களுக்கும் பாதை இல்லாத ஆதனங்களுக்கும் நீதிமன்றம் தேவையின் அடிப்படையில் தான் நியாயம் எனக் கருதும் முறையில் பாதையை ஒதுக்கிக் கொடுக்கும்.

ஈ. தனிப்பட்ட பாதை ஒன்றில் இரண்டிற்கும் மேற்பட்ட ஆதனங்கள் இருப்பின் அது பொதுப்பாதையாகப் பிரகடனம் செய்ய நீதிமன்றுக்கு அதிகாரம் உண்டு.



## 4. கடன் அறவீடும் வட்டியும்

அ. "கொடுக்கல் வாங்கல்" பிணக்கில் இரு தரப்பினரும் தமது பொறுப்புக்களை நிறைவேற்றுமாறு நீதிமன்றம் கட்டளையிடும். கடனாகப்பெற்ற தொகை முழுவதையும் எவ்வித கடனுமின்றிச் செலுத்தும் பொறுப்பு கடனாளிக்கு உண்டு. அதேவேளை முதலுக்கு மேற்படாத வட்டியைப் பெறும் உரிமை, கடன் கொடுத்தவருக்கு உண்டு. கடன் தொகையையும், வட்டியையும் செலுத்தி முடிப்பதற்காக ஆறு (6) மாதங்களுக்கு மேற்படாத கால அவகாசத்தையும் அதற்குரிய பிணை நிபந்தனைகள் என்பவற்றையும் நீதிமன்றம் நெறிப்படுத்தும்.

ஆ. காலம் கடந்த கடன், ஈடு, நிபந்தனை அறுதி போன்ற விடயங்களில் நீதிமன்றம் நியாயமெனக் கருதும் கட்டளையை விடலாம்.

## 5. திருமண வயது

அ. 21 வயது நிறைந்த ஆணும் 18 வயது நிறைந்த பெண்ணும் தங்கள் சொந்த விருப்பத்தில் திருமணம் செய்து கொள்ளலாம்.

ஆ. ஒரு பெண்ணைத் திருமணம் செய்வதாக நம்பிக்கையூட்டி, வாக்குறுதி கொடுத்து அதன் மூலம் அப்பெண்ணுடன் "சட்டப்படியான திருமணம் செய்யாமலே" குடும்பமாக வாழ்ந்தவர் அல்லது அவர் அவ்வாறு வாழ்வதாக மற்றவர்கள் நம்பும்படி நடந்தவர் தொடர்பாக அப்பெண் நீதிமன்றம் சென்று அவரைத் தனக்கு திருமணம் செய்து வைக்குமாறு கோரினால்;

இருவரையும் திருமணம் செய்து கொள்ளுமாறு நீதிமன்றம் கட்டளையிடலாம். அல்லது அவருக்கு ஏற்கனவே ஒரு மனைவி இருப்பதாக நீதிமன்றம் கருதினால் ரூபா 50,000/-க்கு மேற்படாத இழப்பீடு செலுத்துமாறு கட்டளையிடலாம். அத்துடன் நீதிமன்றம் நியாயமெனக் கருதினால் மாதந்தோறும் ஜீவனாம்சம் செலுத்துமாறு கட்டளையிடலாம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இ. ஒரு ஆணும், ஒரு பெண்ணும் திருமணம் முடிப்பதாக உடன்பட்டு திருமணப் பதிவு செய்து கொண்ட பின்னர் எக்காரணத்தைக்கொண்டாவது குறித்த திருமணம் நிறைவேறாது போனால் அப்பெண்ணுக்கு ரூபா 50,000- க்கு மேற்படாத இழப்பீட்டை கணவன் வழங்கவேண்டும்.

எனினும் முழுக்க, முழுக்க பெண்ணின் வெளிப்படையான தவறால் திருமணம் நிறைவேறாது போனால் இழப்பீடு பெறும் உரிமையை அப்பெண் இழந்துவிடுவார். பதிலாக கணிசமான தொகையை தமிழீழ நிவாரண வரியாக எத்தரப்பினரையும் செலுத்துமாறு நீதிமன்றம் கட்டளையிடலாம்.

## பராமரிப்புப் பணம்

ஈ. கணவன்மனைவியிடையே குடும்பப் பிணக்கு ஏற்பட்டு அவர்கள் தனித்தனியே வாழத்தொடங்கினால் அவர்கள் இருவரும் மீண்டும் இணைந்து வாழும்வரை அல்லது நிரந்தரமாக பிரியும் வரை மாதம் தோறும் நியாயமான தொகையை கணவன் மனைவிக்குச் செலுத்த வேண்டும் என்றும் அவ்வாறே பிள்ளைகளின் பராமரிப்பிற்கும் செலுத்தவேண்டுமென்றும் நீதிமன்றம் கட்டளையிடும். இத் தொகை வருமானம், வாழ்க்கைச் செலவு என்பனவற்றின் அடிப்படையில் நீதிமன்றம் தீர்மானிக்கும். எனினும் ரூபா 500/- க்கு குறையாத தொகையாகவே இது விளங்கும்.

## திருமண விலகல்

உ. கணவன், மனைவி இடையேயான குடும்பப் பிணக்கு எவ்வழியிலும் இணக்கம் காணமுடியாதவிடத்து அதற்கென வழங்கப்பட்ட கால அவகாசம் கடந்துவிட்டால் நீதிமன்றம் விவாகரத்து வழங்கும். அப்படியான சந்தர்ப்பத்தில் ஒரு குறித்த தொகையை மனைவிக்கு இழப்பீடாக வழங்குமாறு கட்டளையிடலாம்.



## குழந்தைகள் ஒப்படைத்தல்

ஊ. கணவன், மனைவி இடையே பிணக்கு ஏற்பட்டு அவர்கள் பிரிந்து வாழின் குழந்தைகள் தாயின் பராமரிப்பிலேயே ஒப்படைக்க வேண்டும். எனினும் தாயின் வெளிப்படையான ஒழுக்கக்கேடே குடும்பப் பிணக்கிற்கு காரணமாயின் குழந்தைகள் தகப்பனிடம் ஒப்படைக்க வேண்டும். 16 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகள் விடயத்தில் குழந்தைகளின் விருப்பத்திற்கு ஏற்ப நீதிமன்றம் பொருத்தமான கட்டளையிடலாம்.

எ. கணவன் / மனைவி குடும்ப வாழ்க்கை நிலைத்திருக்கும் போது இவர்களில் ஒருவர் விவாகரத்துப் பெறாமலே இன்னொரு குடும்ப வாழ்க்கையை தொடங்குவாராயின் அது பாரிய சமூக ஒழுக்கக்கேடாகக் கருதப்பட்டு பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடும், அத்துடன் தண்டப் பணமும் செலுத்துமாறு கட்டளையிடலாம்.

ஏ. குடும்ப வாழ்வில் மனைவி இறப்பினால் அல்லது வேறொருவருடன் வாழ்க்கை வாழத்தொடங்கினால் திருமணம் மூலம் கிடைத்த சொத்துக்கள், சீதனங்கள் யாவும் அவர்களின் குழந்தைகளுக்குச்சேரல் வேண்டும் குழந்தைகள் இல்லாத பட்சத்தில் சீதனங்கள் அதனை வழங்கியவரை அல்லது உரித்தாளரை சென்றடைய வேண்டும். எனினும் குழந்தைகள் தாயின் பராமரிப்பிலேயே இருப்பின் சீதனச்சொத்து எவ்வித மாற்றமும் அடையாது இருக்கலாம்.

ஐ. ஒரு ஆண் அல்லது ஒரு பெண் தமது குடும்ப வாழ்வு நிலைத்திருக்கும்போது ஒன்றுக்கு மேற்பட்ட ''குடும்ப வாழ்வுகளை'' வாழ்ந்து வருவது நிரூபிக்கப்பட்டால் அது பாரிய சமூக ஒழுக்கக்கேடாகக் கணிக்கப்பட்டு கடுமையான தண்டனையை நீதிமன்றம் விதிக்கும்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# விபச்சாரம்

## 1. வரைவிலக்கணம்

பண நோக்கத்திற்காக 14 வயதிற்கு மேற்பட்டோரில் (கணவன், மனைவி) தவிர்ந்த ஒரு பாலார் மறுபாலாருடன் உடல் உறவு கொள்ளுதல் விபச்சாரம் எனப்படும்.

## 2. 1. வகைப்படுத்தல்:

விபச்சாரக் குற்றத்திற்கு உட்படுவோர் மூவகைப்படும்.

அ. விபச்சார விடுதி நடத்துவோர் அல்லது அதற்கு உதவுவோர்.

ஆ. விபச்சார விடுதிகளில் விபச்சாரம் செய்வோர்

இ. பாலியல் நோக்கத்திற்காக விபச்சார விடுதிகளுக்கு செல்பவர்கள்.

2. விபச்சார விடுதிகளில் விபச்சாரம் செய்வோர் (2 (1) ஆ) மூன்று வகையினராவர்.

அ. தாமாக விரும்பி விபச்சாரத்தில் ஈடுபடுவோர்.

ஆ. பொருளாதார, சமூக காரணிகளால் ஈடுபடுவோர்.

இ. கட்டாயமாக விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படுவோர்.

## 3. கைதுசெய்தலும், நடவடிக்கையும்

அ. விபச்சாரக் குற்றத்தில் சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டவுடன் பாலியல் நோய் தொடர்பான மருத்துவ ஆய்வுக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

ஆ. விபச்சார குற்றவாளிகள் ஒவ்வொருவரும் தனித்தனியாக உளவியல் அடிப்படையில் அணுகி விசாரிக்கப்படல் வேண்டும்.



## 4. தண்டனைகள்

1. விபச்சார விடுதி நடத்துவோர் அல்லது உதவுவோருக்கு

அ. ஆகக்கூடிய தண்டனையாக ரூபா 10,00,000/- தண்டப்பணமும் 10 வருடக்கடூழியச்சிறையும்.

ஆ. ஆகக் குறைந்த தண்டனையாக ரூபா 10,000/- தண்டப்பணமும் இரண்டு (2) வருட சிறைத்தண்டனையும்.

2. தாமாக விரும்பி விபச்சாரத்தில் ஈடுபடுவோருக்கு

அ. ஆகக்கூடிய தண்டனையாக ரூபா 50,000/- தண்டப்பணமும் மூன்று (3) வருட சிறைத்தண்டனையும்.

ஆ. ஆகக்குறைந்த தண்டனையாக ரூபா 5000/- தண்டப்பணமும் ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனையும்.

3. பொருளாதார, சமூக காரணிகளால் விபச்சாரத்தில் ஈடுபடுவோருக்கும், வலுக்கட்டாயமாக விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படுவோருக்கும் கட்டாய சமூக சீர் திருத்தப்பயிற்சி அளிக்கப்படும்.

4. பாலியல் நோக்கத்திற்காக விபச்சார விடுதிக்குச் செல்வோருக்கும்.

4. அ. ஆகக்கூடிய தண்டனையாக ரூபா 10,000/- தண்டப்பணமும், ஆறு (6) மாத சிறைத்தண்டனையும்

ஆ. ஆகக்குறைந்த தண்டனையாக ரூபா 1000/- தண்டப்பணமும், ஆறு (6) மாத ஒத்திவைக்கப்பட்ட சிறையும்.

## 5. விபச்சார விடுதியில் பாலியல் வன்முறை

விபச்சார விடுதியில் ஒரு பெண் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டால் அது விபச்சாரக்குற்றமாகக் கருதப்படாமல் பாலியல் வன்முறைக்குற்றமாகவே கருதப்பட்டு பின்வருமாறு தண்டனைகள் வழங்கப்படும்.

அ. விபச்சார விடுதி நடத்துபவருக்கு ஆகக்கூடிய தண்டனையாக மரண தண்டனையும்.

ஆ. குற்ற உடந்தையாளருக்கும், பாலியல் வன்முறைக்குற்றம் புரிந்தவருக்கும் குற்றப்பொறுப்புக்கு ஏற்ப அதி உயர்ந்த தண்டனை விதிக்கப்படும்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# பாலியல் வன்முறை

## 1. வரைவிலக்கணம்

பின்வரும் ஐந்து(5) வித சூழ்நிலைகளில் ஏதாவது ஒன்றின்படி ஒரு பெண்ணுடன் ''உடலுறவு'' கொள்வது பாலியல் வன்முறை எனப்படும்.

அ. ஒரு பெண்ணின் விருப்பத்திற்கு மாறாக.

ஆ. அவளுடைய சம்மதத்தைப் பெறாமல்.

இ. அவளை கொலை புரிவேன், காயப்படுத்துவேன் என அச்சுறுத்தி அதனால் அவளுடைய சம்மதத்தைப்பெற்று.

ஈ. தான் அவளுடைய கணவன் அல்லன் என்று தெரிந்திருந்தும் அவளை சட்டப்படி மணமுடித்த கணவன், தானே என்று அவளை நம்பவைத்து அதன் மூலம் அவளுடைய சம்மதத்தைப் பெற்றும், பெறாமலும்.

உ. 14 வயது பூர்த்தியடையாத பெண்ணின் சம்மதத்தைப் பெற்றும், பெறாமலும்.

## 2. பாலியல் வன்முறைக்கு எத்தனித்தல்

பாலியல் வன்முறைக்குற்றத்தைப் புரியவெனத் திட்டமிட்டு முன் முயற்சியில் இறங்கியபோதும், ஏதும் ஒரு சூழ்நிலையில் உடல் உறவு நிகழாவிடில் அது பாலியல் வன்முறை எத்தனிப்புக் குற்றமாகக் கருதப்படும்.

## 3. தண்டனைகள்

அ. பாலியல் வன்முறைக்குற்றம் புரிந்தவருக்கு ஆகக்கூடிய தண்டனையாக மரண தண்டனை விதிக்கப்படும்.

ஆ. பாலியல் வன்முறை எத்தனித்தல் குற்றத்திற்கு 7 (ஏழு) வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

இ. பாலியல் வன்முறைக் குற்ற உடந்தையாளருக்கு ஐந்து (5) வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்படும்.



# திருமண ஏமாற்றம்

1. ''திருமண ஏமாற்றம்'' பின்வருமாறு வகைப்படுத்தப்படும்:

அ. காதலித்துக் கைவிடுதல்.

ஆ. காதலித்து உடலுறவுகொண்டுவிட்டு கைவிடுதல்.

இ. சீதனம் வாங்கிவிட்டு ஏமாற்றுதல்.

1. ''காதலித்த பின்னர் கைவிடுதல்'' என்றால் சமுதாயத்திற்கு அவர்கள் இருவரும் திருமணம் முடித்து வாழப் போகின்றார்கள் என்று நம்பக்கூடியவாறு காதல் புரிந்தவர்களில் ஒருவர் திருமண வாக்குறுதியை மீறினால்' அது காதலித்த பின்னர் கைவிடுதல் என்ற குற்றமாகும்'

### தண்டனை

காதலித்த பின்னர் கைவிடுதல் குற்றத்திற்கு ஆகக்கூடிய தண்டனையாக 6 மாதச் சிறை அல்லது ரூபா 20,000 - தண்டப்பணமும் அல்லது இரண்டும். எனினும் ஒருவரின் தவறினால் மற்றவர் கைவிடில் வழக்கு அனுதாபத்துடன் பரிசீலிக்கப்பட்டு பொருத்தமான தண்டனை விதிக்கப்படும்.

## 2. காதலித்து உடலுறவு கொண்டுவிட்டு கைவிடுதல்

தண்டனை - ஆகக்கூடிய தண்டனையாக 2 வருடச் சிறையும், ரூபா 50,000 - தண்டப்பணமும், அறவிடப்படும். அத்துடன் நியாயமான இழப்பீடும் செலுத்த வேண்டும்.

## 3. காதலித்து தாய்மை அடையச்செய்துவிட்டு கைவிடுதல்

தண்டனை - ஆகக்கூடிய தண்டனையாக 2 வருடச் சிறையும், பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு ரூபா 1,00,000 - இழப்பீடும் பிறக்கும் குழந்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தைக்கு ரூபா 50,000 - சேமிப்புத் தொகையும், அத்துடன் தகப்பன் பெயர் பதியுமாறு கட்டளையும், தகப்பன் சொத்தில் அரைப்பங்கும் பிள்ளைக்கு மாற்றப்படும்.

### 4. சீதனம் வாங்கி ஏமாற்றுதல்

தண்டனை - வாங்கப்பட்ட சீதனத் தொகையில் இரு மடங்கு இழப்பீட்டுத் தொகையாக அறவிட்டு பாதிக்கப்பட்டவருக்கு வழங்கப்படும். அத்துடன் திருமண மீறல் குற்றப்பொறுப்பும் விதிக்கப்படும். மேற்படி குற்றங்களுக்கு உடந்தையாவோர் மீதும் தண்டனை விதிக்கப்படும்.

## இருதார மணம்

ஒருவர் ஒரு திருமணம் வலிதாக இருக்கும்போது விவாகரத்துப் பெறாமலே இன்னொரு திருமணம் செய்வாராயின் அது இருதார மணக் குற்றமாகக் கருதப்படும்.

## தண்டனை

இதற்கு ஆகக்கூடிய தண்டனையாக ஒரு வருடச் சிறையும், தண்டப்பணமும் விதிக்கப்படும். இத்தவறை இரண்டாவது மனைவியும் தெரிந்துகொண்டு செய்தால் அப்பெண்ணுக்கும் இதே தண்டனை விதிக்கப்படும்.

## குறிப்பு

மேற்படி திருமண ஏமாற்றல் குற்றங்களில் பாதிக்கப்பட்டவரே குறித்த குற்றங்களுக்கு காரணமாக அமையின் வழக்கு மிகநுணுக்கமாகவும், அனுதாபத்துடனும் அணுகப்பட்டு குறைந்த பட்ச இழப்பீடு வழங்குமாறு கட்டளையிடப்படும்.

●●●



# தமிழீழ குற்றப் பொறுப்புக்களும் தண்டனைகளும்

தமிழீழ சட்டக்கோவையின் பிரிவு 11க்கு ஏற்ப குற்றப் பொறுப்புக்கள் வகைப்படுத்தப்பட்டு அதற்குரிய தண்டனைகளும் வகுக்கப்பட்டு கீழே தரப்படுகின்றன.

தமிழீழ நீதிமன்றங்களின் பயன்பாட்டிற்கென ''தமிழீழ தண்டனைச் சட்டக்கோவை'' நடைமுறைக்கு வரும்வரையில் இந்தப் பிரிவு வலுவில் இருக்கும். குற்றங்களுக்கான தெளிவான வரைவிலக்கணங்கள் தண்டனைச் சட்டக் கோவையில் விபரிக்கப்பட்டுள்ளன.

தண்டனைகள் விதிக்கும் விடயத்தில் நீதிமன்றங்களுக்கு பரந்த தற்றுணிபு அதிகாரங்கள் உண்டு. சிறைத்தண்டனைக்குப் பதிலாக ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையை நீதிமன்றம் விதிக்கலாம். அதே போல தொடர் குற்றவாளிகளுக்கு அதிகரித்த தண்டனைகளை வழங்கலாம்.

1. **திருட்டு, கொள்ளை** : சம்பந்தப்பட்ட பொருள் அல்லது பெறுமதி இழப்பீடாகவும், அத்துடன் ரூபா. 1000/= க்கு மேற்படாத தொகை தண்டம் அல்லது ஒரு வருடத்துக்கு மேற்படாத சிறைத்தண்டனை அல்லது இரண்டும்.

2. **குற்ற முறையான ஆதனக்கையாடல்** : கையாடப்பட்ட பொருள அல்லது அதன் பெறுமதி இழப்பீடாகவும் அத்துடன் ரூபா. 1000/= க்கு மேற்படாத தண்டம் அல்லது ஒரு வருடத்துக்கு மேற்படாத சிறைத்தண்டனை அல்லது இரண்டும்.

3. **களவாடப்பட்ட ஆதனத்தை, அது களவுப்பொருள் எனத் தெரிந்து கொண்டும் வைத்திருத்தல்** : ஆதனம் பறிமுதல் அத்துடன் ரூபா 1500/= க்கு மேற்படாத தண்டம் அல்லது ஆறு மாதத்திற்கு மேற்படாத கட்டாய சமூக சேவை அல்லது இரண்டும்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

4. மோசடி, ஏமாற்றுதல் : நியாயமான நஷ்டஈடு அத்துடன் ரூபா. 10,000/= க்கு மேற்படாத தண்டம் அல்லது இரு வருடங்களுக்கு மேற்படாத மறியல் அல்லது இரண்டும்.

5. வர்த்தக மோசடிகள் : மோசடியின் இரு மடங்கு பெறுமதி தண்டம் அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத கட்டாய சமூக சேவை அல்லது இரண்டும்.

6. குற்ற முறையான நம்பிக்கைத்துரோகம் : ரூபா. 5000/= க்கு மேற்படாத தண்டம் அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத கட்டாய சமூக சேவை அல்லது இரண்டும்.

7. பொய் ஆவணங்கள் தொடர்பான தவறுகள் : ரூபா 10,000/= க்கு மேற்படாத தண்டம் அல்லது ஒரு வருடத்திற்கு மேற்படாத சிறை அல்லது இரண்டும்.

8. பொது அமைதிக்கு எதிரான தவறுகள், குளப்பம் விளைவித்தல் : ரூபா 5000/= க்கு மேற்படாத தண்டம் அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத சிறை அல்லது இரண்டும்.

9. அச்சுறுத்திப் பெறுதல் தொடர்பானவை : ரூபா 5000/= க்கு மேற்படாத தண்டம் அல்லது மூன்று மாதத்திற்கு மேற்படாத சிறை அல்லது இரண்டும்.

10. தாக்குதல், காயம் விளைவித்தல் : இழப்பீட்டுத்தொகையும் அத்துடன் ரூபா 5000/= க்கு மேற்படாத தண்டம் அல்லது ஆறு மாதத்திற்கு மேற்படாத சிறை அல்லது இரண்டும்.



11. சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல் : விளைவிக்கப்பட்ட சேதத்தின் பெறுமதி இழப்பீடு அத்துடன் ரூபா. 1000/= க்கு மேற்படாத தண்டம் அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத சிறை அல்லது இரண்டும்.

12. அவதூறு புரிதல் : ரூபா 10,000/=க்கு மேற்படாத தண்டம் அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்படாத சிறை அல்லது இரண்டும்.

13. பொதுச் சுகாதாரத்திற்கு இடையூறு விளைவித்தல் : ரூபா. 1000/= க்கு மேற்படாத தண்டம்

14. போதைப் பொருள் உற்பத்தி கடத்தல் விற்பனை : ரூபா. 50,000 க்கு மேற்படாத தண்டம் அல்லது இரு வருடங்களுக்குக் குறையாத கடுழியச் சிறை அல்லது இரண்டும்.

15. போதைப் பொருள் பாவனை : ரூபா. 1000/= க்கு மேற்படாத தண்டம் அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்படாத சிறை அல்லது இரண்டும்.

16. சாதிக்கொடுமை : 2 வருடக் கடுழியச்சிறை

17. அ. ஆட்கடத்தல்; ஒரு வருடத்திற்கு மேற்படாத சிறை.

ஆ. சிறுவர்களை அடிமைத் தொழிலுக்கு அமர்த்தி சித்திரவதை புரிதல் : ரூபா 10,000/= க்கு மேற்படாத தண்டம் அல்லது இரண்டு வருடங்களுக்கு மேற்படாத சிறை அல்லது இரண்டும்.

18. கடமை செய்யவிடாது தடுத்தல் : ரூபா. 1000/= க்கு மேற்படாத தண்டம் அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்படாத சிறை அல்லது இரண்டும்.

19. இலஞ்சக்குற்றம் : இலஞ்சத் தொகையின் மூன்று மடங்கு இழப்பீடு அத்துடன் ரூபா. 50,000/= க்கு மேற்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

படாத தண்டம் அல்லது இரு வருடங்களுக்கு மேற்படாத சிறை அல்லது இரண்டும்.

20. ஊழல்குற்றம் : ரூபா. 5000/= க்கு மேற்படாத தண்டம் அல்லது ஆறுமாதங்களுக்கு மேற்படாத சிறை அல்லது இரண்டும்.

21. கொலை; கொலை முயற்சி : நியாயமான நஷ்டஈடு அத்துடன் ரூபா. 2,00,000/= க்கு மேற்படாத தண்டம் அல்லது பத்து வருடத்திற்கு மேற்படாத கடுழியச்சிறை அல்லது இரண்டும்.

22. இயற்கைக்கு முரணான குற்றங்கள் : நியாயமான இழப்பீடு அத்துடன் ரூபா. 50,000/= க்கு மேற்படாத தண்டம் அல்லது பத்து வருடத்திற்கு மேற்படாத கடுழியச் சிறை அல்லது இரண்டும்.

23. சீதனக்கொடுமை : பாதிக்கப்பட்டவருக்கு ரூபா 25,000/= மேற்படாத இழப்பீடு அத்துடன் ரூபா. 25,000/= க்கு மேற்படாத தண்டம் அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்படாத சிறை அல்லது இரண்டும்.

24. கருச்சிதைவு, பிறவாப் பிள்ளைக்கு ஊறு செய்தல், மழலைகளைக் கைவிடுதல் : ரூபா. 5,000/= க்கு மேற்படாத தண்டம் அல்லது ஆறு மாதத்துக்கு மேற்படாத கட்டாய சமூக சேவை அல்லது இரண்டும்.

25. சூழல் பாதுகாப்பை மீறும் குற்றங்கள் : ரூபா. 2000/= க்கு மேற்படாத தண்டம் அல்லது ஆறு மாதத்துக்கு மேற்படாத கட்டாய சமூக சேவை அல்லது இரண்டும்.



26. சமய சம்பந்தமான தூய்மையைக் கெடுத்தல் தொடர்பானவை : ரூபா. 5000/= க்கு மேற்படாத தண்டம்

27. குற்ற முறையான அத்து மீறல் தொடர்பானவை : ரூபா. 5000/= க்கு மேற்படாத தண்டம்

28. தற்காப்பு உரிமையின் எல்லை மீறிய தவறுகள் : ரூபா. 3000/= க்கு மேற்படாத தண்டம் அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்படாத சிறை அல்லது இரண்டும்.

29. குற்ற உடந்தை : குற்றவாளிக்குரிய தண்டனையே குற்ற உடந்தையாளருக்கும் வழங்கப்படும்.

30. ஏனையவை : ஒப்புரவு அடிப்படையிலான தண்டனை.

* தண்டப் பணம் செலுத்த முடியாத ஒருவர் ஏழு (7) நாட்களுக்குக் குறையாத ஐந்து (5) ஆண்டுகளுக்கு மேற்படாத காலப் பகுதிக்கு கட்டாய சமூக சேவை புரியுமாறு கட்டளையிடப்படுவார்.

●●●

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# தமிழீழ வீதிப்போக்குவரத்து ஒழுங்கு விதிகள்

1. "தமிழீழ வீதிப்போக்குவரத்து ஒழுங்கு விதிகள்" என அழைக்கப்படுவதுடன் இதன் பின்னர் "ஒழுங்கு விதிகள்" எனச் சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

2. தமிழீழத்தில் வீதிப்போக்குவரத்தை ஒழுங்குபடுத்தி வீதி விபத்தில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் தமிழீழ தேசியத்தலைவரால் இவ்வொழுங்கு விதிகள் பிரகடனப்படுத்தப்படுகின்றது.

3. தமிழீழக்காவல் துறைப்பொறுப்பாளர் இவ்வொழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பாக இருப்பதுடன் இது தொடர்பாக அனைத்து அதிகாரங்களும் உடையவராவார்.

4. காலத்திற்குக் காலம் இவ்வொழுங்கு விதிகளில் புதிய பிரிவுகளைச் சேர்ப்பதும் அல்லது சில பிரிவுகளை நீக்குவதற்கும் அல்லது சில பிரிவுகளை இடைநிறுத்துவதற்கும் காவல் துறைப்பொறுப்பாளர் நடவடிக்கை எடுக்கலாம்.

5. அ. இவ்வொழுங்கு விதிகள் தமிழீழத்தில் வீதிகளைப் பயன்படுத்தும் அனைத்து வாகனங்களுக்கும் ஏற்றவாறு பொருந்தும்.

ஆ. இவ்வொழுங்கு விதிகளின் வலிதுடமை பற்றி எத்தகைய விசாரணை மன்றிலும் எவரும் எவ்வித கேள்வியும் எழுப்ப முடியாது.

6. அ. இவ்வொழுங்கு விதிகளை மீறும் எவரும் அவ்விடத்திலேயே தண்டப்பணம் செலுத்தவேண்டும்.

ஆ. எனினும் இவ்வொழுங்கு விதியை மீறிய ஒருவர் தனது தவறை ஏற்றுக்கொள்ள மறுப்பின் அண்மையில் உள்ள தமிழீழ நீதிமன்றின் முன் அவர் நிறுத்தப்பட்டு சுருக்க விசாரணையின் பின்னர் அவர் குற்றவாளியாகக்காணப்



படின் குறிக்கப்பட்ட தண்டப்பணத்துடன் நீதிமன்ற செலவு தொகையாக ரூபா 100/= ம் அவர் மேலதிகமாகச் செலுத்த கட்டளையிடப்படும்.

இ. குறித்த தண்டப்பணம் செலுத்தத் தவறுபவர்களின் வாகனம் தடுத்து வைக்கப்படும்.

ஈ. ஒருவர் இவ்வொழுங்கு விதிகளை இரண்டாம் முறையாகவும் மீறினால் அவரிடம் இருமடங்கு தண்டப்பணம் அறவிடப்படும்.

7. அ. மோட்டார் வாகனம் செலுத்தும் எவரும் தமிழீழ வாகனச் சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்று அதை எப்பொழுதும் தன்னுடன் வைத்திருக்க வேண்டும்.

ஆ. தமிழீழத்தில் பயன்படுத்தப்படும் அனைத்து வாகனங்களும், தமிழீழத்தில் பதிவு செய்யப்படவேண்டும்.

இ. மேற்கண்ட 7 (அ) (ஆ) பிரிவுகளை மீறுவோர் எவரும் தலா ரூபா 500 - வீதம் தண்டப்பணம் செலுத்துதல் வேண்டும்.

8. கடமையில் இருக்கும் காவல்துறை உறுப்பினர் ஒரு வாகனத்தை நிறுத்துமாறு கட்டளையிடும்போது அவ்வாறு நிறுத்தத் தவறும் எவரும் ரூபா 150/= தண்டப்பணமாகச் செலுத்துதல் வேண்டும். தேவை ஏற்படின் குறித்த வாகனம் தடுத்து வைக்கப்படலாம்.

9. அ. ஒருவர் தான் செலுத்திய வாகனத்தின் மூலம் ஏற்படுத்திய வீதிவிபத்தினால் இன்னொருவரின் உயிருக்கு, உடலுக்கு, சொத்துக்கு பாரிய ஊறு விளைவித்து இருப்பின் அவ்விபத்து தொடர்பான விசாரணை அண்மையில் உள்ள தமிழீழ நீதிமன்றத்தினால் விசாரணை செய்யப்பட்டு இழப்பீட்டுத் தொகை பற்றி தீர்ப்பு வழங்கப்படும். இழப்பீட்டுத்தொகை செலுத்தும் பொறுப்பு வாகனச் சொந்தக்காரருடையதாகும்.

ஆ. வீதி விபத்து ஏற்பட்டவுடன் வாகனத்தை அதே நிலை

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

யில் விட்டு விட்டு அண்மையில் உள்ள தமிழீழக் காவல் துறைக்கு எதுவித தாமதமுமின்றி தகவல் கொடுக்க வேண்டும்.

இ. மேற்கண்டவாறு விபத்திற்குள்ளான வாகனத்தை அதேஇடத்தில் விடுவதானால் வீதிப்போக்குவரத்திற்குப் பெரும் இடைஞ்சல் ஏற்படுமெனில் வாகனத்தின் நிலையை தெளிவாகக் குறித்துவிட்டு வாகனத்தை அப்புறப்படுத்த வெண்டும்.

ஈ. வீதி விபத்தைக் கண்ணுற்ற பொதுமக்களும், அவ்விபத்துப்பற்றி தமிழீழ காவல்துறைக்கு உடனடியாகத் தகவல் கொடுப்பதுடன் விசாரணைக்குப் போதிய ஒத்துழைப்பும் வழங்கி வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கு உதவி புரிய வேண்டும்.

10. அ. குண்டு வீச்சு விமானங்கள், உலங்கு வானூர்தி என்பவற்றைக் கண்டால் அதைப்பற்றி வாகனத்தின் சாரதிக்கு அறிவித்தல் கொடுப்பது அனைவரது கடமையுமாகும்.

ஆ. மேற்படி நிகழ்வின்போது வாகனச்சாரதிகள் இயன்ற அளவு பாதுகாப்பு நடவடிக்கைகளை உடன் எடுக்க வேண்டும்.

11. அ. அவசரப்பணிகளில் ஈடுபட்டிருக்கும் வாகனங்களுக்கு (தீயணைப்பு, அம்புலன்ஸ், மண்மீட்பு) சகலரும் வழி விட்டுக்கொடுத்தல் வேண்டும்.

ஆ. சிறு குழந்தைகள், வயோதிபர்கள், அங்கவீனர்கள், மனநோயாளிகள் போன்றோர் பாதையில் செல்லும் போது அவர்கள் நலனில், வாகனங்கள் செலுத்துபவர்கள் அதி கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும்.

இ. கேந்திர நிலையங்கள் (பாடசாலை, நீதிமன்றங்கள், மக்கள் கூடும் இடங்கள், வைத்தியசாலைகள்) முன்னால் வாகனங்கள் செலுத்தும்போது மிகக் குறைந்த வேகத்திலேயே செலுத்துதல் வேண்டும்.



12. இவ்வொழுங்கு விதிகளின்படி பின்வருவன குற்றமாகக் கொள்ளப்பட்டு கீழ்க்குறிப்பிட்ட தொகைக்கு மேற்படாத தண்டப் பணம் அறவிடப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | மதுபோதையில் வாகனம் செலுத்துதல் | ......ரூபா | 1500/= |
| 2. | அளவிற்கதிகமான வேகத்தில் வாகனம் செலுத்துதல் | .... ,, | 250/ |
| 3. | அபாய எச்சரிக்கை வாகனங்களை புறக்கணித்தல் | ...... ,, | 200/= |
| 4. | போகுவரத்திற்கு இடையூறாக வாகனங்களை வீதியில் நிறுத்துதல் | ...... ,, | 200/= |
| 5. | வீதிப்பாவனைக்கு தகுதியில்லாத வாகனங்களை (போதிய பிறேக் இல்லாமை) வீதியில் செலுத்துதல் | ...... ,, | 200/= |
| 6. | பின்னால் வரும் வாகனங்களுக்கு வழி விடாது பாதையின் நடுவால் வாகனத்தைச் செலுத்துதல் | .... ,, | 200/= |
| 7. | இரவு வேளைகளில் வாகனத்தை வீதியில் நிறுத்தியிருக்கும்போது அதில் அபாய விளக்கு எரியவிடப்படாவிடில் | ... ,, | 200/= |
| 8. | வாகனத்தைவிட நீளமான அல்லது அகலமான பொருட்களை வாகனத்தில் ஏற்றிச்செல்லும்போது "அபாய எச்சரிக்கைக்கொடி" பறக்க விடப்படாவிடில் | ...... ,, | 200/= |
| 9. | வாகன இலக்கத்தை வாகனத்தின் முற்பக்கமும், பிற்பக்கமும் தெளிவாகத் தொங்க விடாமை | ...... ,, | 200/= |
| 10. | வாகனத்தை நிறுத்தும்படி காவலர் சைகைகாட்டியபோது வேண்டுகோளை அலட்சியம் செய்தல் | ...... ,, | 150/= |

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

11. இரவு வேளையில் வெளிச்சமின்றி வாகனம் செலுத்துதல். ...... ரூபா 100/=

12. தடை செய்யப்பட்ட பாதையால் அல்லது வழமைக்கு மாறான பக்கத் தினால் வாகனத்தைச் செலுத்துதல். ...... ,, 100/=

13. முன்னால் வாகனத்தைப் பிடித்துக் கொண்டு அதன் துணையால் தன் வாகனத்தில் பயணம் செய்தல். ...... ,, 100/=

14. இரு கைகளையும் விட்டு விட்டு துவிச்சக்கர வண்டியை ஓட்டுதல். ... ,, 50/=

15. வீதியில் நண்பர்களோடு துவிச்சக்கர வண்டி அல்லது மோட்டார் சைக்கிள் களில் அருகருகே மற்றைய பாதசாரி களுக்கும், வாகனங்களுக்கும் இடையூறு ஏற்படும் வண்ணம் செல்லுதல். ...... ,, 50/=

16. எதிரே வரும் வாகனத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் தனது வாகனத்தில் வெளிச்சத்தை ஏற்றவாறு குறைக்காது இருத்தல். ...... ,, 50/=

17. பொருத்தமான சைகை காட்டாது வாகனத்தைத் திருப்புதல். ...... ,, 50/=

18. தவறான பக்கத்தினால் வாகனத்தை முந்துதல். ...... ,, 50/=

●●●



# தமிழீழ தொழில் நடைமுறைச் சட்டம்

தமிழீழத்தில் தனியார் துறைகளில் கடமையாற்றும் தொழி லாளர்களின் கடமைகள், உரிமைகள், சலுகைகள் என்பனவற்றை ஒழுங்குபடுத்தி உறுதி செய்யும் முகமாக இச்சட்டம் உருவாக் கப்பட்டுள்ளது.

கடின உழைப்பை நல்கும் தொழிலாளர்கள் நியாயமற்ற முறையிலும், மனிதாபிமானமின்றியும் சுரண்டப்படுவதிலிருந்து பாதுகாப்பதே இச் சட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

இச்சட்டம் அமுலுக்கு வந்த பின்னர் தமிழீழத்தில் சகல தொழிலாளர்களுக்கும் நாட்சம்பளமாக குறைந்தது 125/= ம் மாதச் சம்பளமாக குறைந்தது ரூபா 2500/- ம் தொழில் வழங்குனரால் கட்டாயமாக வழங்கப்படல் வேண்டும். இவற்றை மீறும் எவரும் மேலதிகமாக ரூபா 2000/= க்கு மேற்படாத அபராதப்பணம் செலுத்துமாறு நீதிமன்றால் கட்டளையிடப் படுவார்.

ஒருவர் ஒரு நாளில் ஆகக்கூடியது ஒன்பது மணித்தியாலங் களுக்கு வேலைக்கு அமர்த்தப்படலாம். இக்கால எல்லைக்குள் சாப்பாட்டிற்கும், இளைப்பாறுவதற்கும் ஒரு மணித்தியால அவகாசம் கொடுக்க வேண்டும்.

ஒருவரின் ஒரு வார (கிழமை) வேலை நேரம் சாதாரணமாக 45 மணித்தியாலத்திற்கு மேலானதாக இருக்கக்கூடாது. அரை நாள் வேலை என்பது 5 மணித்தியால வேலையாகும்.

ஒரு தொழிலாளி ஒரு குறிப்பிட்ட நாளில் 9 மணித்தியா லங்களுக்கு அதிகமாக வேலை செய்யும்படி கேட்கப்பட்டால் அவருக்கு மேலதிக நேரச்சம்பளம் வழங்கப்பட வேண்டும்.

தொழிலாளர்கள் 9 நாட்கள் பொது விடுமுறைக்கு உரித் துடையவர்கள்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தொழிலாளர்கள் ஒரு வருடத்தில் 14 நாட்கள் வைத்திய விடுமுறைக்கும் 7 நாட்கள் சமயா சமய விடுமுறைக்கும் உரித்துடையவர்கள்.

பெண் தொழிலாளர்கள் பிரசவத்திற்கு முன் பதினான்கு (14) நாட்கள் சம்பளத்துடன் விடுமுறையும் பிரசவத்தின் பின் எழுபத்திரண்டு (72) நாட்கள் சம்பளத்துடன் கூடிய விடுமுறைக்கும் உரித்துடையவர்கள்.

ஒரு தொழிலாளி சேவையில் சேர்க்கப்பட்டு முதல் 6 மாதம் வரை தகுதிகாண் நிலையில் உள்ளவராகக் காணப்பட்டாலும் அந்த 6 மாதகாலம் கழிந்ததும் தொழில் வழங்குபவர் அத்தொழிலாளியை எழுத்து மூலம் நிரந்தர மாக்க வேண்டும். அவ்விதம் எழுத்து மூலம் நிரந்தரமாக்கப்படாமல் விட்டால் எக்காரணத்திற்காக நிரந்தரமாக்கப்படவில்லை என்று காரணம் காட்டி அவரது தகுதிகாண் நிலையை மேலும் நீடிக்கலாம். இதை தொழில்வழங்குபவர் செய்யாவிடின் அத்தொழிலாளி இயல்பாகவே ஆறுமாதகால முடிவில் நிரந்தரமாக வேலை செய்யும் ஒருவராகக் கருதப்படவேண்டும். ஒழுங்கீனம், தொடர்ச்சியான கவனயீனம், மதுபோதையில் வேலைக்குவருதல், வேலைக்குச் சமுகமளிப்பதில் ஒழுங்கீனம் போன்றவற்றுக்காக ஒரு தொழிலாளியை வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யலாம். ஆனால் குறைந்த பட்சம் ஒருமாத காலத்துக்குள் அது பற்றிய விசாரணை நடாத்தி அத்தொழிலாளியை குற்றவாளியாகக்கண்டு தகுந்ததண்டனை விதிக்கலாம். நிரபராதியாகக் காணும்பட்சத்தில் வேலையில்லாக் காலத்திற்குச் சம்பளத்துடன் வேலை திரும்பவும் வழங்கவேண்டும்.

பாரதூரமான ஒழுங்கீனங்களுக்கும் வேலைவழங்குபவரின் சொத்துக்கு நட்டம் விளைவிப்பன போன்றவற்றிற்கும் தொழிலாளி வேலைநீக்கம் செய்யப்படலாம்.

மேற்படி விதிகளைமீறும் வேலைவழங்குபவர்களுக்கு ரூபா 1000/= க்கு மேற்படாத அபராதமும் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கு அவர்களுக்கு ஏற்பட்ட இழப்பீடும் வழங்கப்படவேண்டும்.



தொழில் செய்வோர் கட்டாயமாகத் தொழிலாளர்களின் வருகையை நிருபிக்கும் வகையில் தினவரவுப் புத்தகத்தை வைத்துப் பேண வேண்டும்.

சம்பளக் கொடுப்பனவு பற்றிய நாள், மாதம், கொடுக்கப்பட்ட தொகை, பெற்றுக் கொண்டதன் அத்தாட்சியாக கையொப்பம் போன்ற விபரங்கள் அடங்கிய பதிவேட்டைக் கட்டாயம் வைத்துப் பேணப்பட வேண்டும்.

மேற்படி இவ்விரு ஆவணங்களும் பேணப்படாவிடினும் அபராதத்திற்குரிய குற்றமாக அது கருதப்பட்டு தொழில் வழங்குபவருக்கு ரூபா 500/= க்கு மேற்படாத அபராதம் விதிக்கப்பட வேண்டும்.

## 2. தமிழீழ தொழில் நீதிமன்றங்கள்

ஒரு தொழிலாளி தான் நியாயமற்றமுறையில் வேலை நீக்கம் செய்யப்பட்டதாகக் கருதினால் எழுத்துமூலம் தமிழீழ நீதிமன்றிற்கு, வேலைநீக்கம்செய்யப்பட்டு 6 மாத காலத்துக்குள் விண்ணப்பம் செய்ய வேண்டும்.

தமிழீழத்தில் கடந்த சில காலமாக தொழிலாளர்கள் தமது வேலைநீக்கம பற்றி விண்ணப்பிக்கக்கூடிய அல்லது முறையிடக் கூடிய சந்தர்ப்பமோ வசதியோ அதற்கான மன்றோ இல்லாத காரணத்தினால், இக்கால கட்டத்தில் வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் தொழில் நீதிமன்று இயங்கத்தொடங்கிய திகதியிலிருந்து சரியாக ஒருமாத காலத்துள் தொழில் நீதிமன்றுக்கு முறைப்பாடு செய்யும் சந்தர்ப்பம், இதனால் வழங்கப்படுகின்றது. மேற்கூறிய ஒரு மாத காலத்துக்குப் பின்னர் இச்சலுகை எதுவித காரணத்திற்காகவும் நீடிக்கப்படமாட்டாது.

தமிழீழத்தில் இயங்கும் சகல தனியார்துறைகளிலும் பொதுஸ்தாபனங்களிலும் கூட்டுறவுத்துறையிலும் தொழில்புரிபவர்களின் வேலை நீக்கம் சம்பந்தமான விடயங்களை ஆராய்ந்து விசாரணை நடாத்தி நீதி வழங்கும் நியாயாதிக்கம் தொழில் நீதிமன்றங்களுக்குண்டு.

தொழில் நீதியன்றங்கள் இல்லாதிருக்கும் இடங்களில் தொழிலாளர்கள் வேலைநீக்கம்பற்றிய விசாரணைகளை நடாத்தி தீர்ப்புவழங்கும் நியாயாதிக்கம் மாவட்ட நீதிமன்றுக்குண்டு.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தொழில் மன்றுக்கு அனுப்பப்படும் விண்ணப்பம் உண்மைப் பிரதியுடன் இணைக்கப்பட வேண்டும். மன்று வழக்கைப் பதிவு செய்து விண்ணப்பத்தின் உண்மைப்பிரதியை தொழில் வழங்குபவர் அல்லது தொழில் கொள்வோருக்கு அனுப்பி அவரது பதிலை உண்மைப் பிரதியுடன் பதினான்கு (14) நாட்களுக்குள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

வேலை வழங்குபவர் தான் எழுத்துமூலம் கொடுக்கும் பதிலில் தொழிலாளியை வேலைநீக்கம் செய்ததை ஒப்புக் கொண்டால் அவ்வேலை நீக்கத்தை நியாயப்படுத்த வேலை கொள்பவரை அதற்கான சாட்சியங்கள், ஆவணங்கள் போன்றவற்றைச் சமர்ப்பித்து நிரூபிக்குமாறு கேட்கவேண்டும். வேலை நீக்கத்தை நியாயப்படுத்துவது இக்கட்டத்தில் வேலை கொள்பவரின் கடமை. வேலை— கொள்பவர்தான் தொழிலாளியை வேலை நீக்கம் செய்யவில்லை என எழுத்துமூலம் கூறினால் விண்ணப்பம்செய்த தொழிலாளியேதான் நியாயமற்ற முறையில் வேலை நீக்கம் செய்யப்பட்டார் என்பதை நிரூபிக்கும் கடமைக்கு உள்ளாவார். அதற்கான சாட்சியங்களையும் ஆவணங்களையும் முன்வைப்பது அவரது கடமை.

அவர் வேலை நீக்கம் செய்யப்பட்டது நியாயமெனக் கருதினால் மன்று தொழிலாளியின் விண்ணப்பத்தை நிராகரிக்கலாம்.

வேலை வழங்குபவர் தொழிலாளியை வேலைநீக்கம் செய்தது நியாயமற்றது என்ற முடிவை மன்று எடுத்தால் அது நிவாரணமாக;

அ. தொழிலாளியை மீண்டும் வேலைக்கு அமர்த்தும்படியும் அத்துடன் அவர் வேலையில்லாதிருந்த காலத்திற்கான வேதனத்தைக் கொடுக்கும்படியும் தீர்ப்பு வழங்கலாம். அல்லது

ஆ. மீளவும் வேலைக்குப் பதிலாக இழப்பீடு வழங்கும் படியும் அத்தொழிலாளி 5 வருடங்களுக்குமேலாக சேவையில் இருந்திருந்தால் பணிக்கொடையையும் சேர்த்து வழங்கும் படி தீர்ப்பு வழங்கலாம். அல்லது



இ. சில சந்தர்ப்பங்களில் வேலை நீக்கத்திற்கும் தீர்ப்புக்கும் இடையில் உள்ள கால இடைவெளி குறைவாக இருந்தால் மீள வேலை மாத்திரம் வழங்கும் படியும் தீர்ப்புக்கூறலாம்.

ஈ. தமிழீழத்தில் இன்று நடைமுறையில் சில வேலைவழங்குபவர்கள் தொழிலாளிக்கு சட்டப்படியாக வழங்க வேண்டிய சம்பளங்களையும் கொடுப்பனவுகளையும் முறையாக வழங்காத நிலை நிலவுகிறது. ஆகவே சட்டப்படி தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவுகள் சரிவர நடைமுறைபடுத்தப்படுகின்றனவா என்று ஆராயவும் அக்குறைபாட்டை நிவர்த்தி செய்து குறைத்துக் கொடுக்கப்பட்ட கொடுப்பனவுகளை தொழிலாளர்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் உரிமையும் தொழில் நீதிமன்றின் நியாயாதிக்கத்திற்குள் உள்ளடக்கும்.

## 3. பணிக்கொடை

தமிழீழத்தில் சகல தொழிலாளர்களும் கீழ்க்காணும் சந்தர்ப்பங்களில் பணிக்கொடைக்கு உரித்தாவார்கள்.

ஒரு தொழிலாளி 5 வருடத்திற்கு மேல் நிரந்தர சேவை செய்திருக்க வேண்டும். அவ்வாறு 5 வருட சேவையைப் பூர்த்தி செய்தால் அத் தொழிலாளிக்குக் கட்டாயம் பணிக்கொடை வழங்க வேண்டும்.

பணிக்கொடை கணிக்கப்படும்போது தொழிலாளி கடைசியாகப் பெற்ற முழுச் சம்பளத்தின் அடிப்படையில் அது கணக்கிடப்பட வேண்டும். உதாரணமாக ஒரு தொழிலாளி 10 வருட சேவை செய்திருந்தால் அவரது கடைசி மொத்த மாதச் சம்பளம் ரூபா 5000/= மாக இருந்திருந்தால், அவருக்காக ஊழியர் சேமலாப நிதிக்கு தொழில் கொள்பவரினால் அதற்குரிய தொகை வழங்கப்படாது இருந்தால் அத்தொழிலாளிக்கு ஒரு வருடத்திற்கு ஒருமாதச்சம்பளம் என்ற கணக்கில் 10 வருடத்திற்கும் 10 மாதம் எனக்கணக்கிட்டு ரூபா 50,000/= பணிக்கொடையாகக் கொடுபட வேண்டும். தொழில்வழங்குபவர் ஊழியர் சேமலாபநிதிக்கு, அத்தொழிலாளியின் பெயரில் பணம்கட்டி வந்திருந்தால் இதில் மாற்றம் ஏற்படும். அப்படியான நிலையில் ஒருவருடத்திற்கு அரைமாதச் சம்பளம்தான் பணிக் கொடை

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

யாக வழங்கப்படும். மேற்படி உதாரணப்படி ஊழியர் சேமலாப நிதிக்குப் பணம் கட்டப்பட்டிருந்தால் 10 வருட சேவைக்கும் அரைமாதச் சம்பளம் வீதம் 5 மாதச் சம்பளம் கணக்கிடப் பட்டு ரூபா 25,000/= பணிக்கொடையாகக் கொடுபட வேண்டும்.

## 4. ஊழியர் சேமலாப நிதியம்

சேமலாபநிதிக் கொடுப்பனவு சகல தொழிலாளர்களுக்கும் கொடுபட வேண்டும். இந்நிதியத்திற்குள் சகல தொழிலாளர் களையும் உள்ளடக்க வேண்டும்.

ஒவ்வொரு தொழில் கொள்வோரும் ஊழியர் சேமலாப கொடுப்பனவாக தொழிலாளியின் முழுச் சம்பளத்தில் 12%ம் தனது கணக்காலும் தொழிலாளியின் சார்பில் 8%ம் சேர்த்து இந்நிதியத்திற்குச் செலுத்த வேண்டும். அதாவது ஒரு தொழி லாளியின் மாதச் சம்பளம் 2000/= ரூபா என்றால் தொழில் வழங்குபவர் அல்லது தொழில் கொள்பவர் 240/= ரூபாவையும் தொழிலாளி 160/= ரூபாவையும் கொடுக்க வேண்டும். இத் தொகையான 400/= ரூபாவையும் தொழில் கொள்பவர் அல்லது வேலைவழங்குபவர் தான் சேமலாபநிதிக்குச் செலுத்த வேண்டும். இக்கடமையில் இருந்து இவர்கள் விலகிக் கொள்ள முடியாது. தொழில்வழங்குபவர் தாம் ஒருதொழிலாளிசார்பாக சேமலாபநிதி கொடுப்பனவு செலுத்தியதற்குச் சான்றாகப் பற்றுச் சீட்டுக்களை வைத்திருக்க வேண்டும். அப்படி இல்லாத பட்சத்தில் கடைசியாகக் கட்டியது எப்போது என்று ஆராய்ந்து அதன் பின்னர் அவர் கட்டவேண்டிய ஊழியர் சேமலாப நிதியைக் கணக்கிட்டு அதை வேலைகொள்பவரிடமிருந்து அற விட்டுச் சம்பந்தப்பட்ட தொழிலாளிக்கு தொழில்நீதிமன்றம் கொடுக்கும்.

●●●



# வழக்கு விசாரணைகளும், சட்ட அறிஞர்களின் பணியும்

1. தமிழீழ நீதிமன்றங்களில் சட்டப்பணிகளைப் புரிவோர் ''சட்ட அறிஞர்கள்'' என அழைக்கப்படுவர். இத்தகைய சட்ட அறிஞர்கள் இரு வகையினராகக் கணிக்கப்படுவர்.

### 1. தமிழீழ அரச சட்ட அறிஞர்கள்

தமிழீழ சட்டக்கல்லூரியில் கல்வி பயின்று சித்தியடைந்த அங்கீகரிக்கப்பட்டவர்கள் தமிழீழ அரச சட்ட அறிஞர்கள் என அழைக்கப்படுவர்.

### 2. பொதுவான சட்ட அறிஞர்கள்

தற்போது சட்டத்தரணிகளாக இருப்போர் தமிழீழ சட்டங் களை ஏற்று தமிழீழத்திற்கான சத்தியப்பிரமாணம் செய்து தமிழீழ நீதி நிர்வாக ஒழுக்கக்கோவைக்கு அமைய இணங் கிக்கொண்டால் அவர்கள் பொதுவான சட்ட அறிஞர்க ளாக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். இவர்கள் தமிழீழ நீதி மன்றங்களில் கட்சிக்காரர்கள் சார்பில் தோன்றி வாதாட வும் ஏனைய சட்டப் பணிகளைப் புரியவும் உரிமை பெறுவர்

2. அ. பொதுவான சட்ட அறிஞர்களை தமது வழக்கு நட வடிக்கைக்கு பயன்படுத்துவோர் சட்ட வாதாட்டக் கட் டணத்தை முன்கூட்டியே குறித்த நீதிமன்றப் பதிவாள ரிடம் செலுத்திப் பற்றுச்சீட்டு பெறல் வேண்டும். எக் காரணம் கொண்டும் சட்ட அறிஞர்களிடம் வாதாட் டக்கட்டணம் நேரடியாகச் செலுத்தக்கூடாது.

3. பொதுவான சட்ட அறிஞர்களுக்கு அவர்கள் பெயருக்கு கட்சிக்காரரால் செலுத்தப்பட்ட தொகை எவ்வித கழிவு மின்றி தமிழீழ நீதி நிர்வாகத்துறையால் ஒவ்வொரு மாத முடிவிலும் வழங்கப்படும்.

4. பொதுவான சட்ட அறிஞர்களின் உதவியின்றி ஒருவர் தாமே தமது வழக்கில் தன் சார்பில் நீதிமன்றத்தில் வாதாட

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

முடியும். எனினும் வரையறுக்கப்பட்ட சட்ட எல்லைக்குள்ளேயே அவர் தனது வாதங்களை நிகழ்த்தலாம்.

5. வழக்கில் கட்சிக்காரர் மிக வறிய நிலையில் தான் இருப்பதை நீதி நிர்வாகத்துறைக்குத் தெளிவாக உறுதிப்படுத்தி சட்ட உதவியை நாடினால் பொருத்தமான ஏற்பாடுகளை நீதிச்சேவை ஆணைக்குழு மேற்கொள்ளும்.

## கோல உடைகள்

பொதுவான சட்ட அறிஞர்கள் நீதி நிர்வாகத்துறையால் ஒப்புதலளிக்கப்பட்ட கோல உடைகளை மட்டுமே நீதிமன்றத்தில் அணிந்து இருத்தல் வேண்டும்.

●●



# முக்கிய குறிப்பு

* இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவங்களை ஒத்தவாறு விண்ணப்பங்கள் 12'' × 8'' அளவு தாளில் தயாரித்து பூரணப்படுத்தி, உரிய கட்டணத்தை நீதிமன்றப் பதிவாளரிடம் செலுத்தி, பற்றுச்சீட்டுடன் இணைத்துக் கையளிக்க வேண்டும்.

* வழக்குப்பற்றிய முழுவிபரம், உரிமைக்கோரிக்கைக்கான தொகுப்பு அறிக்கை, மறுமொழிபற்றிய முழுவிபரம், மறுப்புக் கோரிக்கைக்கான தொகுப்பு அறிக்கை என்பன தனித்தனியாக (12'' × 8'' அளவு தாள்களில்) தயாரித்து இணைக்கப்படவேண்டும்.

* வழக்கின் பெறுமதியில் ஐந்து (5) வீதம் தமிழீழ நிவாரண வரியாகவும், ஆவணப் பதிவுக் கட்டணமாக சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு ஆவணத்துக்கும் தலா 5 ரூபா வீதமும் செலுத்தப்படல் வேண்டும்.

* மேன் முறையீட்டுக் கட்டணம் ரூபா 1000/=
* நிபுணர் குழு அறிக்கையைக் கோரல் வேண்டுமென விண்ணப்பிக்கும் தரப்பினர் ரூபா 1500/= செலுத்த வேண்டும்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# மாதிரிப் படிவம்

## வழக்கு அறிக்கை

| | |
|---|---|
| வழக்கு இல. | |
| பெறுமதி | |
| தன்மை | |

# தமிழீழ நீதி மன்றம்

.............................................. நீதி நிர்வாகப் பிரிவு

1. வழக்காளியின் முழுப்பெயர், விலாசம்: ......................
..............................................................................
..............................................................................

2. எதிராளியின் முழுப்பெயர், விலாசம்: ......................
..............................................................................
..............................................................................
..............................................................................

3. சாட்சிகளின் முழுப்பெயர், விலாசம்: ......................
..............................................................................
..............................................................................
..............................................................................
..............................................................................
..............................................................................

4. வழக்கின் சுருக்கம்: (வழக்கு பற்றிய முழுவிபரம் பிறிதாகத் தயாரித்து இத்துடன் இணைக்கவும்) ......................
..............................................................................
..............................................................................
..............................................................................

5. எதிர்பார்க்கப்படும் நிவாரணம்: (உரிமைக் கோரிக்கைக்கான தொகுப்பு அறிக்கை பிறிதாகத் தயாரித்து இத்துடன் இணைக்கவும்)
..............................................................................
..............................................................................
..............................................................................

6. தமது பக்க சட்ட அறிஞரின் முழுப்பெயர், விலாசம்:
..............................................................................
..............................................................................
..............................................................................

7. இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களின் விபரப் பட்டியல்:

அ) ..............................................................................
ஆ) ..............................................................................
இ) ..............................................................................
ஈ) ..............................................................................
உ) ..............................................................................
ஊ) ..............................................................................
எ) ..............................................................................
ஏ) ..............................................................................
ஐ) ..............................................................................
ஒ) ..............................................................................
ஓ) ..............................................................................
ஔ) ..............................................................................

........................ ........................................
திகதி வழக்காளியின் ஒப்பம்

........................................
சான்றுபடுத்தும் சட்ட அறிஞரின் ஒப்பம்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## மாதிரிப் படிவம்

மறுமொழி

| | |
|---|---|
| வழக்கு இல. | |
| பெறுமதி | |
| தன்மை | |

# தமிழீழ நீதி மன்றம்

## மறுமொழி அறிக்கை

நீதி நிர்வாகப் பிரிவு ......................................................

1. மறுமொழி சமர்ப்பிக்கும் எதிரியின் முழுப்பெயரும், விலாசமும் ......................................................
2. வழக்காளியின் முழுப்பெயரும் விலாசமும் ......................................................
3. தமது பக்க சாட்சிகளின் முழுப்பெயரும், விலாசமும். ......................................................
4. மறுமொழியின் சுருக்கம் (மறுமொழி பற்றிய முழுவிபரம் பிறிதாகத் தயாரித்து இத்துடன் இணைக்கவும்)
5. மறுப்புக் கோரிக்கையின் சுருக்கம் (மறுப்புக் கோரிக்கைக்கான தொகுப்பு அறிக்கை பிறிதாகத் தயாரித்து இத்துடன் இணைக்கவும்)
6. தமது பக்க சட்ட அறிஞர்கள் இருந்தால் அவரது முழுப் பெயர், விலாசம் ......................................................
7. இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களின் விபரப்பட்டியல்
   அ. ......................................................
   ஆ. ......................................................
   இ. ......................................................
   ஈ. ......................................................
   உ. ......................................................
   ஊ. ......................................................

.................... திகதி

...................................... மறுமொழி அணைப்பவரின் ஒப்பம்

...................................... சான்றுபடுத்தும் சட்ட அறிஞரின் ஒப்பம்

## மாதிரிப் படிவம்

அழைப்பாணை

| | |
|---|---|
| வழக்கு இல. | |
| பெறுமதி | |
| தன்மை | |

# தமிழீழ நீதி நிர்வாகத்துறை
# தமிழீழ விடுதலைப்புலிகள்
# தமிழீழ நீதிமன்றம்

நீதி நிர்வாகப் பிரிவு: ......................................................

வழக்காளி / எதிராளி / சாட்சிக்காரருக்கான அழைப்பாணை

| | |
|---|---|
| வழக்காளியின் முழுப்பெயரும், முகவரியும் | |
| எதிராளியின் முழுப்பெயரும் முகவரியும் | |
| சார்த்தப்பட்ட தவறு பற்றிய விபரங்கள் அல்லது வழக்கு பற்றிய விபரங்கள் | (பிரதி இணைக்கப்பட்டுள்ளது) |

இந்த அழைப்புக் கட்டளை பின்வருபவருக்கு முகவரியிடப்படுகின்றது.

| | |
|---|---|
| வழக்காளி / எதிராளி / சாட்சிக்காரரின் முழுப்பெயரும், முகவரியும் | |

(மறுபக்கம் பார்க்க)

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பதிவாளர்,
தமிழீழ நீதிமன்று,
........................

வழக்கு இல....................

மேற்குறித்த அழைப்பாணையை இன்று பெற்றுக்கொண்டேன்.

.........................................
பெறுபவரின் கையொப்பம்

திகதி.....................

விநியோகித்தவரின் ஒப்பம்.........................................

| | | | | |
|---|---|---|---|---|
| சமுகமளிக்க வேண்டிய இடம் | | | | |
| சமுகமளிக்க வேண்டிய காலம் | ஆண்டு | மாதம் | திகதி | நேரம் |

குறிப்பு: 1. இவ் அழைப்பாணை விசாரணைத்திகதிக்குப் பின் உமக்குக் கிடைத்தால் நீர் குறித்த மன்றுக்கு நேரில் சென்று அடுத்த விசாரணைத் திகதியைக் கேட்டு அறிந்து கொள்ளவும்.

4. விசாரணைத் திகதிக்கு தக்க காரணமின்றி சமுகமளிக்காவிடின் நீதிமன்றச் சட்டக்கோவை பிரிவு 14க்கு அமைய நீதிமன்ற அவமதிப்புக்கான தண்டனை விதிக்கப்படும்.

நீதிமன்ற கட்டளைப்படி

.................................
நீதியாளர்
தமிழீழ மாவட்ட நீதிமன்றம்

அழைப்புக் கட்டளை பெறுபவரின் முகவரி
திரு / திருமதி / செல்வி

..................................................................
.................................................
.........................................

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive